★ விலை ரூபா 1-00

# ஈழநாடு
# THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர் 25 ஆடி 2 ஷவ்வா 7 இதழ் 157

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 18—7—83

### துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன்
## கிணற்றிலிருந்து மீட்கப்பட்ட
## சடலம் வல்வெட்டித்துறை இளைஞருடையது!
### மனைவி இந்துமதி அடையாளம் காட்டினர்

(புலோலி)

பருத்தித்துறை பகுதியை சேர்ந்த மாவடி வயல் வெளி கிணற்றில் துப்பாக்கி சூட்டு காயங்களுடன் கண்டெடுக்கப்பட்ட சடலம் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சோதிலிங்கம் சோம சுந்தரம் (25 வயது) என்பவருடையதென்று அவரது மனைவி இந்துமதி சடலத்திலிருந்து எடுக்கப்பட்ட கைக்கடிகாரம், மோதிரத்தைப் பார்த்து அடையாளம் காட்டினர்.

வல்லிபுரம் குடத்தனை மாவடி வயல்வெளி கிணற்றிலிருந்து இச்சடலம் மீட்கப்பட்டது. பருத்தித்துறை நீதவான் திரு. கணபதிப்பிள்ளை மரணவிசாரணை நடத்தினர். விசாரணையின்போது சடலத்தை எவரும் அடையாளம் காட்டாததினல் அரச செலவில் அடக்கம் செய்யும்படி நீதவான் பணித்திருந்ததை தொடர்ந்து அடக்கம் செய்யப்பட்டது.

சடலத்திலிருந்து எடுக்கப்பட்டமோதிரம், கைக்கடிகாரத்திலிருந்து அச்சடலம்தனது கணவனுடையது எனமனைவி இந்துமதி பொலிசாரிடம்தெரிவித்திருப்பதாக கூறப்படுகிறது.

தாங்கள் வல்வெட்டித்துறை

(8-ம் பக்கம் பார்க்க)

### இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு
# மீசாலையில் பலியான இருவரில்
# ஒருவர் திருகோணமலை இளைஞர்

## சடலத்தைத் தாயார் அடையாளம் காட்டினர்!

(ஏ. வி. மாணிக்கம்)

**மீசாலையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான இருஇளைஞர்களில் ஒருவர், திருகோணமலையைச் சேர்ந்த லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி என்று, அவரது தாயாரான மரியாசெபமாலை நேற்று யாழ். பெரிய ஆஸ்பத்திரியிலுள்ள பிரேத அறையில் உள்ள இரு இளைஞர்களின் சடலங்களைப் பார்த்தபின் அடையாளம் காட்டினர்.**

மீசாலைப் புகையிரத நிலையத்துக்குச் சமீபத்தில் நேற்று முன்தினம் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகி யாழ். ஆஸ்பத்திரிபிரேத அறையில் வைக்கப்பட்டிருக்கும் இரு இளைஞர்களின் சடலங்களில் ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.

திருகோணமலை தேவாலய வீதியைச் சேர்ந்த பாலன் அல்லது சீலன் அல்லது அசீர் என்று மூன்று புனைப்பெயர்களைக்கொண்ட லூக்காஸ் சாள்ஸ் அன்ரனி (23 வயது) என்பவரேஅடையாளம் காணப்பட்டவராவார்.

இவரது தாயாரான திருமதி மரியசெபமாலை தமது மூத்த மகனுடன் வந்து பொலிசாரின் முன்னிலையில்அச்சடலம் தமது ஐந்தாவது மகன் என்றுஅடையாளம் காட்டினர்.

இத்தாயாருக்கு இறந்தவருடன் ஆறு பிள்ளைகள் உண்டென்றும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான லூக்கஸ் சாள்ஸ் அன்ரனி என்பவர் ஐந்தாவது பிள்ளை என்றும், இவர் திருகோணமலை சென். ஜோசப் கல்லூரியில் ஒன்பதாம் வகுப்பு வரை படித்

(8-ம் பக்கம் பார்க்க)

### "பயங்கரவாதப் பிரச்னையை
## அரசு மனிதாபிமானத்துடன் நோக்குகின்றது" பிரதமர் 'பிரேமா' கூறுகிறர்

(கொழும்பு)

'நாட்டினை பிளவு படுத்த முயலும் பயங்கர வாதத்தை ஆயுத பலத்தின் மூலம் அழித்தொழிக்க முடியும். ஆனல் அரசாங்கம் அவ்வாறு நடந்து கொள்ளாது: அரசு இப்பிரச்னையை மனிதாபிமானத்துடனேயே நோக்குகின்றது.

இவ்வாறு பிரதமர் திரு: ஆர். பிரேமதாசா பிலியந்தலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். அவர் அங்கு தொடர் பேசுகையில் கூறியதாவது:

'ஒரு சிலர் செய்யும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் குற்றச் செயல்களுக்கும் அப்பாவி மக்களை தண்டிப்பது எமது நோக்கமல்ல.

'உலகிலேயே பிளவுபட்ட

(8-ம் பக்கம் பார்க்க)

## பேராதனையில் மூன்று மாணவர் கைது!

(பேராதனை)

பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்கள் விடுதிகளிலிருந்தும், ஏனைய இடங்களிலிருந்தும் வெளியேற்றப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இவர்களை வெளியேற்றுவதில் பொலிசார் ஈடுபட்டிருந்தனர். நேற்றுமுன்தினம்

(8-ம் பக்கம் பார்க்க)

### ரயில் சேவை ரத்தினல்
## அமையதொழிலாளர் வேலையிழந்தனர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி ரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டதைத்தொடர்ந்து வடபகுதி ரயில் நிலையங்களில் உள்ள அமைய தொழிலாளர்கள் வேலையிழந்துள்ளனர்.

போட்டர்கள் லீவ் செல்வியலும் நாட்களில் அமைய தொழிலாளர்களுக்கு வேலை வழங்கப்படுவது வழக்கம்.

அமைய தொழிலாளர்கள் ஒவ்வொரு ரயில் நிலையங்களிலும் பதிவு செய்யப்பட்டுள்ளனர், 3 வருடங்கள் இவர்கள்

(8-ம் பக்கம் பார்க்க)

உ

## திருமண அழைப்பு

மணமகன்: பொன். சத்தியபாலன் (லண்டன்)

மணமகள்: கந்தையா உலகநாயகி (கமநலசேவைத் திணைக்களம், கொழும்பு)

இடம்: யாழ். பழம்ரோட் சித்திவிநாயகர் கோவில்

காலம்: 20-7-83 புதன்கிழமை காலை 9-10 மணி

உறவினர்களும், நண்பர்களும் இவ்வழைப்பினைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதந்து மணமக்களை ஆசிர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

★ வரவேற்பு: பிற்பகல் 3 – 5 மணி
மணமகன் இல்லம்,
கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

க. செல்வராசாவும் பாரியாரும்,
சி. சந்திரசேகரமும் பாரியாரும்,
'சந்திரோதயம்',
(புகையிரத நிலைய முன்பாக),
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

S.V.P. சிவரத்தினமும் பாரியாரும்,
திருமதி தயா. செல்வநாயகம்,
பொன். தர்மபாலன்
'செல்வம்'
123, கோவில் வீதி,
யாழ்ப்பாணம்.

(8023)

### "ஆறுவது அரசியலமைப்புத் திருத்தத்தின்மூலம்
## தமிழ்பேசும் இனத்தின் சுதந்திரத்தை அடக்கிவிடமுடியாது"
### வவனியா 'சிவா' அறிக்கை

(வவனியா)

''ஆட்சியாளர் கொண்டுவர இருக்கும் ஆறுவது அரசியல் அமைப்புச் சட்டத்திருத்தம் இந்நாட்டில் வாழுகின்ற தமிழ் பேசும் தேசிய இனத்தின் சுதந்திரவேட்கையை இன்னும் தீவிரமாக காட்டுமே அன்றி அதனை அடக்கிவிடமுடியாது. சட்டங்களினல் பிறப்புரிமை கோருகின்ற ஒரு தேசிய இனத்தை ஆடக்கி ஆளுவோம் என்று நினைப்பது பகற்கனவு. சுதந்திரம் வேண்டிநின்ற பல் வேறுநாடுகளின் சரித்திரம் ஆட்சியாளர்களுக்கு நல்ல பாடத்தினைபுகட்டியுள்ளது''.

இவ்வாறு வவனியா எம்.பி. திரு. தா சிவசிதம்பரம் விடுத்திருக்கும் அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். திரு. சிவசிதம்பரம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

''மனித அடிப்படை உரிமைகள் நாளுக்கு நாள் பறிக்கப்பட்டதோடு கல்வி, வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் காட்டப்படுகின்றபுறக்கணிப்பு பயங்கரவாத சட்டங்களினலும் பாதுகாப்புபடையினரால் மக்களுக்கு விளைவிக்கப்படுகின்ற இன்னல்கள் இவை எல்லாம் ஆண்டு பல தமிழ் பேசும் இனத்துக்கு ஆட்சியாளரால் விளைவிக்கப்படுகின்ற துரோக இனவாதச் செயல்களைச் செய்கின்ற ஆட்சியாளர்கள் உரிமை கேட்கின்றவர்களை இனவாதம் பேசுகின்றவர்களன்றி பிரிவினை கோருபவர் எனக் கூறுவது 'நான் உன்னை கொன்றாலும் நீ வாய் பொத்தி சும்மா

(8-ம் பக்கம் பார்க்க)

## வர்த்தகர்களுக்கு எச்சரிக்கை!
### நெல்லியடியில் சுவரொட்டி!!

(சுண்டிக்குளி)

கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்ககூடியவிலைக்கு பொருட்களை விற்கும் வர்த்தகர்களுக்கு எச்சரிக்கைசெய்யும் சுவரொட்டிகள் நெல்லியடியில் காணப்படுகிறது.

'கழுகுப்படை' எனக் கையெ

(8-ம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக் கட்சி இன்று தீர்மானிக்கும்

(கொழும்பு)

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவினல் இம் மாதம் 20-ம் திகதி கூட்டப்படவுள்ள வட்டமேசை மகாநாட்டில் கலந்துகொள்வதா, இல்லையா என்பதுபற்றி சிறீலங்கா சுதந்திரக்கட்சி இன்று கூடித் தீர்மானிக்கவுள்ளது.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பரந்தன் D, ஐந்தாம் வாய்க்கால் என்னுமிடத்தில் 7 ஏக்கர் நெற்காணி இரு போகம் செய்யக்கூடிய நீர்ப்பாசன வசதியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு செ. அம்பிகைபாலன், சட்டத்தரணி, ஜே. பி. யூ. எம். 9, கண்டி வீதி, சாவகச்சேரி, தொலைபேசி:262. 7963

சாவகச்சேரி சந்தைக்குக் கிட்ட மெயின்றேட்டு அருகில் 1 பரப்புக்காணி விற்பனவுக்குண்டு. இரும்புத்தொழில், வாகனதிருத்தம், மரக்காலை போன்ற வியாபாரதேவைக்கு உகந்தது. தொடர்பு: சி. வீரகத்தி, சதா தேநீர்க்கடை, கோட்டடி, சாவகச்சேரி. 7980

அஸ்டின் 40 பரீனு மொடல் 4 ஸ்ரீ தொடர் இலக்கத்தை உடையதும் ஒரு கலன் பெற்றேலுக்கு 45 மைல் ஓடக்கூடியதுமான கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: S. A. பரமானந்தம், 333, ஆடியபாதம் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 7996

சொந்தப்பாவனையில் உள்ள (லான்சர் S. L. மொடல்) கார் விற்பனைக்கு உண்டு. 120, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T. P. 22420. (8001)

Concrete Bricks எஞ்சிய ஐந்து அங்குலஅகலமான கொங்கிறீற் கற்கள் (விலை: ரூ. 4/-) (800) விற்பனைக்குண்டு. 50, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 7997

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் பாடசாலைக்கு அருகாமையில் கொழும்புத்துறை வீதியில் மூன்று பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: அ. தம்பிஐயா, சோதிடவிலாச புத்தகசாலை, பெரியகடைவீதி, யாழ்ப்பாணம். 8006

மன்னூர் அடம்பன் நெடுங்கண்டல் கிராமசேவையாளர் பிரிவில் 6 ஏக்கர் மேட்டுநிலம் குழாய்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு. விரும்புவோர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8008 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 8008

கோப்பாய் இராச வீதியில் 2-ம் கட்டையடியில் றேட்டுக் கரையோரத்தில் 9 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: கண்ணுலொறி, க. காங்கேசன், கோப்பாய். 8009

## தேவை

பிரபல வர்த்தக ஸ்தாபனத்துக்கு ஆங்கில, கணித அறிவுள்ள Salesman உடன் தேவை. விபரம்: நேரில். 142 (336), ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம். 8016

## தேவை

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் பிரபல மருந்துச்சாலை ஒன்றில் விற்பனையாளர்களாக வேலை செய்வதற்கு மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் 15 வயதிற்கும் 20 வயதிற்கும் இடைப்பட்ட ஆண்பிள்ளைகள் தேவை. 25-7-83க்கு முன்பு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 8004, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். 8004

வீட்டு வேலைக்கு உடன் (35-40வயதுக்கிடையில்)பெண் உதவியாள் தேவை. செ. சற்குணனந்தன், 27, அராலி வீதி, யாழ்ப்பாணம். 8013

## காணவில்லை

எனது மகன் பரமேஸ்வரநாதனை 11-7-83 இலிருந்து பாடசாலையில் இருந்து புறப்பட்டவர் வீடு வந்து சேரவில்லை. நீலக் கட்டைக் காற்சட்டையும் வெள்ளை அரைக்கைச் சேட்டுடனும் பச்சைநிற புத்தகப் பையுடனும் சென்றவர். உயரம் 4½' இருக்கும். வெள்ளை நிறமானவர், பக்க உச்சி வாரியிருப்பார். தகவல் தருவோர்க்கு சன்மானம் வழங்கப்படும். அன்பு மகனே உடனே திரும்பி வா. உண்ணுமல் வீட்டார் கவலையுற்று இருக்கின்றார்கள். தகவல் அறிவிக்கவேண்டிய முகவரி: K. சண்முகம், றூபி இல்லம், உடுவில், சுண்ணுகம். 8019

## சேவை

இன்றைய புதிய தமிழ் சினிமாப் படப் பாடல்களும், மிருதங்க சக்கரவர்த்தி, சலங்கை ஒலி, ராசங்கள் மாறுவதில்லை, சந்திப்பு, ஆயிரம் நிலவே வா இன்னும் பல — Tdk, Agfa கசெற்களில் ஒலிப்பதிவு செய்து கொடுக்கப்படுகின்றன. ''துர்க்காஸ்'', 68, கே.கே.எஸ்.வீதி, சுண்ணுகம். 8017

## TO LET

Small One bed Roomed House - Close town-modern Facilities (Bathroom, Lavatory Modern) for Couple. Contact: 142, Hospital Road, Jaffna. 8015

Jaffna Town, Stanley Rd. big Storerooms Available. Commercial Purpose Office Ect. Contact: 142, Hospital Rd., Jaffna. 8014

## யாருடையது?

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபை சுகாதார மேற்பார்வையாளர் திரு. சீ. சிவமகேஸ்வரன் என்பவ சுண்டுக்குளி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் கண்டு எடுத்த ஒரு திறப்புக்கோர்வை 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக் கொள்ளவும்.

## பெண் நெசவாளர் தேவை

மின்தறியில் அல்லது கைத்தறியில் அனுபவம் உள்ளவர்களுக்கு எமது தொழிற்சாலையில் வேலை வாய்ப்பு உண்டு. தகமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**25-7-83 ற்கு முன் விண்ணப்பிக்கவும்.**

**சீமா சில்க் இன்டஸ்ரீஸ் லிமிட்டற்,**
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

7987

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

முல்லைத்தீவு
மாவட்ட நீதிமன்றம்

மரணசாதனமின்றி மரணமெய்திய முல்லைத்தீவு, பிரதான வீதியைச் சேர்ந்த ஹாஜியார் அயினியாப்பிள்ளை சுல்தான் அப்துல் காதிறு என்பவரின் மரணச் சொத்து விடயமாக
— மரணமெய்தியவர்
முகமது சரீபு பெண் பாத்திம்மா நாச்சியா,
பிரதான வீதி,
முல்லைத்தீவு, — மனுதார்
மரணச்சொத்து
நியாயாதிக்கம் இல: 14
எதிராக

1. முகம்மது இப்ருகிம் செய்னுள் ஆப்தீன்,
2. அப்துல்கமீது பெண் செய்நம்பு நாச்சியா,
3. மீரா சாகிப் அல்லது சமூன்,
4. அப்துல் சமத் சதுறுதீன்,
5. சாகுல் கமீது மகள் உம்மா ஹபீபா,
6. சாகுல் கமீது மகள் றகீமா,
7. சாகுல் கமீது வஹாப்,
8. சாகுல் கமீது மஜீத்
9. சாகுல் ஹமீது ஹபீக்கா.
10. இப்ருகிம் சமூன்,
11. இப்ருகிம் ஜெனுனியா,
12. இப்ருகிம் பலீல்
13. இப்ருகீம் ஹைறுான்,
14. இப்ருகிம் சக்கா,
15. இப்ருகிம் இருஸத்,
16. இப்ருகிம் மஸனு எல்லோரும், பிரதான வீதி, முல்லைத்தீவு, தற்போது நீராவிப்பிட்டி, தண்ணியூற்று.

— எதிர்வாதிகள்

மேலேயுள்ளபெயர்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்து போனவரின்மரணசாதனத்தை எண்பிப்பதற்காக / நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1983-ம் ஆண்டு தை மாதம் 7-ம் திகதி 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குத் தகுந்த காரணம் இருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1982-ம் ஆண்டுஐப்பசிமாதம் 14ஆம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது.

நீதிமன்றக் கட்டளைப்படி

**சண்முகநாதன்,**
பதிவாளருக்காக

என்னுல் வரையப்பட்டது.

**வி. எஸ். நடராசா,**
மனுதாரின் சட்டத்தரணி

**7-1-83**

பின்னுறுதிக் கட்டளைக்கான காரணம் காட்டும் திகதி 10-2-83ம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி
**எஸ். கமலேஸ்வரன்,**
பதிவாளர்,

**10-2-83**

பின்னுறுதிக் கட்டளைக்கான காரணம் காட்டும் திகதி 10-3-83ம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி
**எஸ். கமலேஸ்வரன்,**
பதிவாளர்,

**10-3-83**

பின்னுறுதிக் கட்டளைக்கான காரணம் காட்டும் திகதி 28-4-83ந் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி
**ஏ. ஸ்ரீஸ்கந்தராசா,**
பதிவாளர்,

**28-4-83**

பின்னுறுதிக் கட்டளைக்கான காரணம் காட்டும் திகதி 25-8-83-ம் திகதிக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றக் கட்டளைப்படி
**மு. ஸ்ரீபத்மநாதன்,**
பதிவாளர்,

7957

---

தாவடி மயான அபிவிருத்திச் சபை

## தேவை

தாவடி மயானத்திற்கு பராமரிப்பாளர் தேவை.

விரும்பியோர் **24-7-83** ஞாயிற்றுக்கிழமை காலை 9—12 மணிக்கு இடையில் தாவடி மத்திய சனசமூக நிலையத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

கே. கே. ஜெயநாதன்,
செயலாளர்.

(8011)

---

அல்கத்தீன் பைப்புகள்

## விற்பனைக்கு

1½'' அங்குல பாவித்த நல்ல நிலையிலுள்ள பைப்புகள் 35 அடி தொடக்கம் 200 அடி வரை நீளமுள்ள துண்டங்களாக விற்பனைக்குண்டு.
இவை அடி ரூபா 4-00 படி கிழமை நாட்களில் பெற்றுக்கொள்ளலாம்.

திட்ட இணைப்பாளர்,

**றெட்பாறு சிறீலங்கா,**
விசுவமடு, முல்லைத்தீவு.

(8010)

---

## G. C. E. (A/L) ஆகஸ்ட் 1983

மாணவர்களுக்காக விசேட வெளியீடு:
**நவீன சேதன இரசாயனம் பயிற்சிகள்**
புதிய உயர்தர வகுப்பிற்குரியது.
ஆக்கியோன்: T. நாகரெட்ணம் B. Sc. (Cey)
(கடந்த சில வருடங்களாக அமைப்புக்கட்டுரையில் இடம்பெறும் சேதன இரசாயன வினுக்களை உள்ளடக்கியது)
எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.
V. P. P.யிலும் பெற்றுக்கொள்ளலாம்.
விலை. 5/50 V. P. P. உண்டு.

வெளியீடு விற்பனை.

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
44, பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23631 தந்தி: Books

---

## அறிவித்தல்

கிளிநொச்சி
**நகை அடைவுவைப்போர் பாதுகாப்புச்சங்கம்**

இச்சங்கம் கிளிநொச்சி மக்கள் வங்கியில் அடைவு வைத்து களவுபோனதாக கருதப்படும் நகைகளுக்குரியவர்களைப் பாதுகாப்பதற்காக உருவாக்கப்பட்டுள்ளது. இத்தகைய இழப்புக்குரியவர்கள் யாவரும் இச்சங்கத்தின் பொருளாளர் எஸ். எஸ். செல்லையா அவர்களுடன் கண்டி வீதி கிளிநொச்சியில் உள்ள குமரன் பல் வைத்தியசாலையில் தொடர்புகொள்ளவும்.

க. பாக்கியநேசன் (தலைவர்)
எம். இராமநாதன் (செயலாளர்)

ஸ்ரீதேவி இல்லம்,
திருநகர், கிளிநொச்சி.

(8020)

---

## ஹோம் பிறுன்ஸ் லிமிட்.

யாழ். புடவை வியாபாரிகளுக்கு
ஓர் வரப்பிரசாதம்

ஹோம் பின்ஞன்ஸ் லிமிட், 82, கன்ஞதிட்டி வீதியிலுள்ள ஹோம் பிறுன்ஸ் ஸ்தாபனத்தில் பூகொடைஆலை புடவை வகைகள் மொத்த விற்பனைக்குண்டு.

I. ✯ சாயமூட்டிய பொப்பிளின்
II. ✯ வெள்ளை பொப்பிளின்
III. ✯ பிறின்ரெட் பப்றிக்

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**ஹோம் பிறுன்ஸ் லிமிட்.**
82, கன்ஞதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
(போன்: 24310)

தலைமைக்காரியாலயம்:
**ஹோம் பிறுன்ஸ் லிமிட்.**
463, காலி வீதி, கொழும்பு-3.

# "இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு ஜனதிபதி ஜயவர்த்தன சுமுக முடிவு காண வேண்டும்"

— தமிழக முதல்வர் எம். ஜி. ஆர்.

## வன்முறைகளை ஒடுக்கும் பெயரால் அப்பாவித் தமிழர் துன்புறுத்தப்படுவதை நிறுத்தும்படியும் வலியுறுத்து

சென்னை, ஜுலை 17

**"இலங்கைத் தமிழர்களின் பிரச்னைகளுக்கு இலங்கை ஜனதிபதி ஜயவர்த்தன சுமுகமான தீர்வுகளைக் காணவேண்டும்" என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கேட்டுக்கொண்டார்.**

சென்னையில் நேற்று நடைபெற்ற அமரர் காமராஜரின் எண்பத்தியோராவது பிறந்த தினவிழாக் கொண்டாட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு இலங்கை ஜனதிபதிக்கு வேண்டுகோள் விடுத்தார்.

முதலமைச்சர் திரு. ராமச்சந்திரன் மேலும் தமது உரையில் கூறியதாவது: "வன்முறைகள், பயங்கரவாதம் ஆகியனவற்றை ஒடுக்கும்வகையில் இலங்கை அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதனுல் அப்பாவித் தமிழ்பேசும் மக்கள் பாதிப்படைகின்றனர். ஆகையினுல் இலங்கை அரசாங்கம் வன்செயல்களை ஒடுக்க எடுக்கும் நடவடிக்கைகள் என்ற பெயரால் தமிழ்மக்கள் பாதிப்படைவதைத் தடுக்கவேண்டும். அத்துடன் அவர்களின் பிரச்னைகளுக்கு சுமுகமான தீர்வுகளை ஜனதிபதி ஜயவர்த்தன எடுக்கவேண்டும்" என்ருர்.

இவ்விழாவில் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் காமராஜரின் உருவப்படமொன்றையும் திரைநீக்கம் செய்துவைத்தார். "காமராஜர், அறிஞர் அண்ணு போன்ருரின் வாழ்க்கை வரலாறுகளை நூல் வடிவில் பயன்மிக்க தகவல்களோடு வெளியிட தமிழக அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்கும். இதற்காக சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் பிரிவொன்றும் ஆரம்பிக்கப்படும் என்றும்" திரு. எம். ஜி. ஆர். கூறினுர்.

இந்திய பாதுகாப்பமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன், தமிழக ஆளுநர் எல். எம். குரானு, இந்திராகாங்கிரஸ் பிரமுகர் திரு. கறுப்பையா மூப்பனுர் உட்பட பல கட்சிகளைச் சேர்ந்த தலைவர்கள், மற்றும் அமைச்சர்கள், அறிஞர்கள் ஆகியோர் இவ் விழாவில் கலந்துகொண்டனர். (கி)

### சுயஉதவி வீடமைப்பு வீடுகள் திறப்புவிழா

(மன்னுர்)

ஐ. தே. கட்சி அரசின் 6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மன்னுர் பகுதியில் சுயஉதவி வீடமைப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட வீடுகளை மூதூர் எம். பி.யும், மன்னுர் மாவட்ட அமைச்சருமான ஜனுப் எம். ஈ. எச். மஹ்ரூப் இம்மாதம் 21ம் திகதி திறந்து வைப்பார்.

மன்னுர்-சாவற்காடு பகுதியிலும், எருக்கலம்பிட்டி-புதிய பள்ளிவாசல், பெரியபள்ளிவாசல் பகுதியிலும் சுயஉதவி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வீடுகளே திறந்துவைக்கப்படவுள்ளன.

## நாட்டு முன்னேற்றத்துக்கு வலுவான மத்திய அரசு தேவை!

– திருச்சியில் ரஜீவ்காந்தி

சென்னை, ஜுலை 17

"வலுவான மத்திய அரசாங்கம் இருந்தால் மட்டுமே ஒரு நாடு துரிதமாக முன்னேற்றமடையமுடியும். மாநில அரசுகளும், கட்சிகளும் இதனை உணர்ந்து மத்திய அரசின் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கவேண்டும்"

இவ்வாறு இளைஞர் இந்திரா காங்கிரஸ் அமைப்புச் செயலாளரும், இந்திய பாராளுமன்ற உறுப்பினருமான திரு. ரஜீவ் காந்தி நேற்று திருச்சிராப்பள்ளியில் கர்மவீரர் காமராஜரின் எண்பத்தியோராவது பிறந்தநாள் கொண்டாட்டங்களில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினுர்.

திரு. ரஜீவ்காந்தி மேலும் தமது உரையில் தெரிவித்ததாவது: "இந்தியா சுதந்திரமடைந்த பின்னர் வலுவான ஆளுங்கட்சி தோன்றியது. ஆகையினுலேயே தொழில் துறை, விஞ்ஞானதுறை, உணவு உற்பத்தித்துறை ஆகியனவற்றில் இந்தியா தற்போது குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கண்டுள்ளது, எந்த ஒரு நாட்டிலும் வலுவான ஒரு மத்திய அரசாங்கம் இருந்தால் மட்டுமே அந்த நாட்டில் துரித அபிவிருத்தி, ம்டமான ஆட்சி என்பன ஏற்படமுடியும். எனவே மாநில அரசாங்கங்களும், கட்சிகளும் மத்திய அரசைப் பலப்படுத்தி நாட்டை முன்னேற்றவேண்டும்.

தமிழகம் நாட்டுக்கு கொடுத்த பெரும் பரிசே கர்மவீரர் காமராஜர். இவர் தமது கடின உழைப்பு, தன்னலமற்ற சேவை, ஆகியவற்ருல் சிறப்புற்ருர். இத்துடன் மதியஉணவுத்திட்டம், இலவசக் கல்வி முறை ஆகியவற்றை அமுல்படுத்தி சிறந்த சோஷலிஸவாதியாகவும் விளங்கினுர் என்ருர்.

இவ்விழாவில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ஆர். வெங்கட்ராமன், ராஜ்ய சபை உறுப்பினரும் நடிகருமான திரு. சிவாஜி கணேசன் ஆகியோரும் உரையாற்றினர். திருச்சி மநநகர் இவ்விழாவையொட்டி பெரும்விழாக்கோலம் பூண்டிருந்தது. காமராஜரின் 81வது வயது பூர்த்தியைக் குறிக்கும் வகையில் 81 அலங்கார ஊர்திகள் பவனி இடம் பெற்றது. இப்பவனி சுமார் மூன்று மணித்தியாலங்கள் வரை நடைபெற்றது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் பலபாகங்களிலும் நேற்றுமுன்தினம் காமராஜர் விழா வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்று அறிவிக்கப்பட்டது. (கி)

## தமிழகத்தில் கல்வீச்சுக்கு தலைமை பொலிஸ்காரர் பலி!

சென்னை, ஜுலை 7

தமிழகத்திலுள்ள பொலிஸ் நிலைய மொன்றின் தலைமைப் பொலிஸ்காரர் ஒருவர் ஆர்ப்பாட்டக்காரர்கள் சிலரின் கல்வீச்சுக்கு இலக்காகி மரணமானுர்.

அப்பொலிஸ் நிலையத்தில் கைதி ஒருவர் மரணமடைந்ததைத் தொடர்ந்தே அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் இவ்வாறு ஆர்ப்பாட்டஞ் செய்தனர். பொலிஸ் நிலையம் முன்னுல் அவர்கள் பலத்த கல்வீச்சில் இறங்கியிருந்தனர். இதனையடுத்தே அந்நிலையத்தின் தலைமைப் பொலிஸ்காரர் கல்லடிபட்டு மரணமானுர். வேறு சில பொலிஸார் பலத்த காயங்களுக்குள்ளானுர்கள்.

இக்கல்வீச்சு ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து அப்பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் ஆர்ப்பாட்டக்கரர்களைக்கலைக்கதடியடி கண்ணீர்ப் புகைப் பிரயோகம் ஆகியவற்றை மேற்கொண்டனர். இதனையடுத்து பதினெட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் காயமடைந்தனர். ஏனையவர்கள் சிதறிஓடலானுர்கள். [கி]

### இ. தொ. கா. பங்கு பற்றும்

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பயங்கரவாதத்தைஒழிப்பது சம்பந்தமாக ஜனதிபதி கூட்டும் மகாநாட்டில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கலந்துகொள்வதென்று முடிவு செய்துள்ளது. (சூ)

### மன்னுருக்கு இடமாற்றம்

(கல்வியங்காடு)

இரத்தினபுரி கல்வித் திணைக்களத்தின் கீழ் உள்ள பாடசாலைகளில் 22 வருடங்களாக உதவி ஆசிரியராகவும், 6 வருடங்கள் எகலியகொட மொறகல தமிழ் வித்தியாலய அதிபராகவும் கடமையாற்றிய திரு. சி. கணபதிப்பிள்ளை இம்மாதம் முதல் மன்னுர் சென், சவேரியார் மகாவித்தியாலயத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (அ)

## ஹெலிகாப்டர் கடலில் வீழ்ந்தது: 20 பேர் பலி!

லண்டன், ஜுலை 17

இங்கிலாந்தின் தென்பகுதியில் ஹெலிகப்டர் விமானமொன்று கடலினுள் வீழ்ந்ததால் இருபதுபேர் பலியானுர்கள்.

இச்சம்பவம் தென் இங்கிலாந்தில் ஆங்கிலக் கால்வாயில் இடம் பெற்றது. சுமார் இருநூறு அடி ஆழமான கடல் பகுதியிலேயே இக்ஹெலிகப்டர் விமானம் நீரில் வீழ்ந்து மூழ்கியது.

விபத்து ஏற்பட்டதையடுத்து கடற்படையினர் உடன் செயலில் இறங்கி ஆறு பேரைக் காப்பாற்றினர். சீரற்ற காலநிலையும் பலத்த கடல் கொந்தளிப்புமே இவ் விபத்துக்குக் காரணமென்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## வளைகுடா, அரபிக்கடலில் கண்ணி வெடிகள்!

### வர்த்தகக் கப்பல்களுக்கு பெரும் ஆபத்து: பாகிஸ்தான் கடற்படை எச்சரிக்கை

கராச்சி, ஜுலை. 17

"வளைகுடாப் பகுதியிலும், அரபிக்கடலிலும் கண்ணிவெடிகள், வெடிபொருட்கள்மிதந்து கொண்டிருப்பதால் இப்பகுதிகளூடாக செல்லும் கப்பல்கள் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்கவேண்டியுள்ளன" என்று பாகிஸ்தான்கடற்படையைச் சேர்ந்த பேச்சாளர் ஒருவர் எச்சரிக்கை செய்துள்ளார்.

இதே போன்ற எச்சரிக்கை கடந்த சில நாட்களுக்கு முன்னர் அமெரிக்க கடற்படைப் பிரிவொன்றினுலும் விடுக்கப்பட்டிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

வளைகுடா, அரபிக்கடல் பகுதிகளில் காணப்படும் கண்ணிவெடிகளினுல்இருவர்த்தகக் கப்பல்கள் அண்மையில் சேதமடைந்தனவென்றும் தெரிவிக்கப்பட்டது.

பாகிஸ்தான் கடற்படைப் பேச்சாளர் மேலும் தெரிவிக்கையில், ஈரான், ஈராக் ஆகியனவற்றுக்கிடையிலான வளைகுடா யுத்தத்தையடுத்தே இக் கண்ணி வெடிகளும், வெடிபொருட்களும் இவ்வாறு பெருமளவு காணப்படுவதாகவும், இவைகளால் அரபிக்கடற்கரையோர நாடுகளுக்கு மிகநெருக்கடி நிலை தோன்றியிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை, வளைகுடாபகுதியில் ஈரானிய எண்ணெய்க் கிணறுகள் இரண்டிலிருந்து விரயமாகிக் கொண்டிருக்கும் எண்ணெயால் பல கடல்வாழ் உயிரினங்கள் அழிந்துள்ளனவென்றும் தெரிவிக்கப்பட்டது. (கி)

# பிரிவினைவாத 'அகாலிதள்' கிளர்ச்சியை கைவிடப் போவதாக அறிவிப்பு

## 13 மணிநேர ஆலோசனையின் பின் முடிவு

புதுடில்லி, ஜுலை 17

**இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் இயங்கிவரும் 'அகாலிதள்' தீவிரவாத இயக்கத்தினர் தமது கிளர்ச்சி நடவடிக்கைகளை அடுத்த மாதம் 15-ம் திகதியிலிருந்து நிறுத்தப் போவதாக அறிவித்துள்ளனர். கடந்த 11 மாதங்களாக இவர்கள் தமது இயக்க கிளர்ச்சி நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.**

பஞ்சாபின் அமிர்தஸரஸ் நகரில் 'அகாலிதள்' இயக்கத்தின் தலைவர் ஹர்சன்சிங் லோங்கோவால் தலைமையில், 'அகாலிதள்'கள் தமது தலைமையகத்தில் பதின்மூன்றுமணி நேர பேச்சுக்களை நடத்தினர். இப்பேச்சுக்களையடுத்தே அவர்கள் மேற்கண்டவாறு தமது தீர்மானத்தை வெளியிட்டனர்.

அகாலிதள் தலைவர் ஹர்சன் சிங்லோங்கோவால் இப் பேச்சுக்களையடுத்து பத்திரிகை நிருபர்கள் மகாநாடு ஒன்றினை நடத்தினுர். அம் மகாநாட்டில் அவர், பஞ்சாபிலுள்ள இந்து, கிறிஸ்தவ, சீக்கிய, முஸ்லீம் மதத்தவர்கள் அனைவரும் சகோதரர்களாக ஒற்றுமையுடன் இருக்கவேண்டுமென்பதையே அகாலிதள் இயக்கம் விரும்புகிறதென்று குறிப்பிட்டதுடன், வன்முறைகள் ஏற்படுவதைத் தடுத்து அமைதியைப் பராமரிக்க அவ்வியக்கம் பாடுபடுமென்ருர்.

செய்திப் பத்திரிகைகளே பஞ்சாப் நிலவரங்களை மிகைப்படுத்தி, பரபரப்பான தகவல்களை வெளியிடுகின்றனவென்றும் லோங்கோவால் குற்றம் சாட்டினுர், இத்துடன் மத்திய அரசு தமது இயக்கத்துடன் கடுமையானஒத்துழையாமைப் போக்கை கடைப்பிடிப்பதாகவும் அவர் கவலை தெரிவித்தார்.

எதிர்வரும் ஆகஸ்ட் நான்காம் திகதியை அகாலிதள் இயக்கம் பூரண பிரார்த்தனை நாளாக அனுசரிக்குமென்றும், நேற்றைய தமது இயக்க பேச்சுக்களின் முடிவுகள் ஒருமனதானவை என்றும் லோங்கோவால் குறிப்பிட்டார். (கி)

### மணிவாக்கு

கெடுதலிலும் நல்லதைத் தருமர் கண்டார். நல்லதிலும் கெடுதலைத் துரியோதனன் கண்டான்; இது உலகைப் பார்ப்பவர்களின் உள்ளப்பாங்கைப் பொறுத்தது.

— காஞ்சிகாமகோடி ஆசாரிய சுவாமிகள்.

# “பனந்தும்புத் தொழிலை இரண்டாவதாக மேற்கொள்க”

## சீவல் தொழிலாளருக்கு ஆலோசனை

(புலோலி)

''இலங்கைக்கு வந்துள்ள கொமன்வெல்த் நாடுகளின் பனைத்தொழில் நிபுணர் திரு. சம்பந்தத்தை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுச் சங்கங்கள் நன்கு பயன்படுத்த வேண்டும். புதிய பனைவள அபிவிருத்தி வேலைகளை ஆரம்பித்து நடத்துவதற்கான ஆலோசனைகளை வழங்க அவர் தயாராகவுள்ளார்.''

இவ்வாறு வடமாகாண தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட கூட்டுறவு (பனம் பொருள்) ஆக்க உதவி ஆணையாளர் திரு.எஸ், வேலாயுதபிள்ளை குறிப்பிட்டார். யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடமாகாண தெங்கு பனம் பொருழ் கூட்டுறவுச் சங்க சமாஜத் தலைவர் திரு. எஸ். நடேசு தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் தொடர்ந்து உரையாற்றிய திரு. வேலாயுதபிள்ளை குறிப்பிட்டதாவது,

''சீவல்தொழிலாளர்கள் பனந்தும்புத் தொழிலைச் சீவல் தொழிலுடன் இரண்டாந்தரத் தொழிலாக மேற்கொள்ள வேண்டும். பெண்களும், பிள்ளைகளும் வீட்டில் இருந்தவாறே தும்பு உற்பத்தியைக் குடிசைக் கைதொழிலாகச் செய்வதன் மூலம் கூடுதல்வருவாயை ஈட்டமுடியும்.

''தொழிலாளர்களின் தலைமையிலேயே தற்போது தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. சீவல்தொழிலாளர்கள் தங்களில் ஒருவரையே தலைவராகத் தெரிவுசெய்கின்றனர். ஆனல் சில சங்கங்களின் தலைவர்கள் ஆட்களை வைத்துக் கள்ளைச் சீவுவித்து தங்கள் பேரில் பதிவு செய்துகொண்டு சங்கத் தலைவராக இருப்பதாக எனக்குப் புகார்கள் கிடைத்து வருகின்றன.

ஒரு ஊழியரின்மேல் சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு அந்த ஊழியரைச் சங்க நிர்வாகம் வேலையில் இருந்து நீக்கினல் மறுபடியும் அவரை எந்தக் காரணம் கொண்டும் மீளாய்வு என்ற போர்வையில் மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது.

அகற்றிய கள் என்ற சொற்பிரயோகம் ஒரு பகல்மோசடியாகும். இது அப்பாவி அங்கத்தவர்களுக்குத் திட்டமிட்டுச் செய்யப்படும் துரோகமாகும். இதனை ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது. நிர்வாகமும், முகாமையாளரும், ஊழியர்களும் விஷயத்தில்அதிக கவனம் செலுத்த வேண்டியதும் அவசியம்.'' (அ)

# நமது நோக்கு

## பிரிட்டனை ஆள்வது பொதுஜன அபிப்பிராயம்

பாராளுமன்ற ஆட்சி பிரிட்டனுக்குப் பொருத்தமான அளவிற்கு வேறெந்த நாட்டையும் நாம் ஒப்பிட முடியாது; புரட்சிகளும் புரளிகளும் அங்கு இடம் பெறுவது அரிதினும் அரிது,

பாராளுமன்றஅமைப்பின் அன்னை என்று பிரிட்டனை வர்ணிப்பது பெருமளவிற்குத் தகும்; அண்மையில் வெளிவந்த இரண்டு முடிவுகள் இதனை வலியுறுத்துகின்றன.

கடந்த பிரிட்டிஷ் பொதுத் தேர்தலில் பிரிட்டிஷ் மக்கள் எதிர்பாராத வகையில் அமைந்தது திருமதி மார்கரெட் தாட்சாரின் அமோக வெற்றி.

அதற்கு ஏதேனுெரு மக்களைக் கவரும் நிகழ்ச்சியே காரணமென்று குறிப்பிடுவது அரசியல் ஆழமற்ற சிந்தனை. ஒருகட்டத்தில் திருமதி தாட்சரை வெளியேற்ற வேண்டுமென்று கங்கணம் கட்டிய மக்கள், தங்கள் அபிப்பிராயத்தை அடித்த ‘போக்லன்ட்ஸ்’ காற்றுக்கு மாற்றினவர்களல்ல.

பலவகையிலும் உலகில் தனது முதன்மையை இழந்து வருகிறதென்ற கவலை பிரிட்டிஷ் பொதுமக்களை நீண்டகாலம் வாட்டிவந்தது; அதற்கொரு திருப்பம் ‘போக்லன்ட்ஸ்’ வெற்றிகொடுத்தது; அதனைத் தொடர்ந்து பிரதமர் கடைப்பிடித்த இறுக்கமான உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கைகளில் மக்களுக்கு நம்பிக்கை வேகமாக அதிகரித்தது. அதுவே தாட்சரின் வெற்றிக்கு வழிகோலியது.

இதற்கு நேர்மாருன நிகழ்ச்சியே நாம் எடுத்துக் கொண்டவிடயம்.

1965ம் ஆண்டு தொழிற்கட்சி பாராளுமன்றத்தில் மரணதண்டனையை சட்டஏட்டிலிருந்து நீக்கிவிட வெண்டுமென்று முடிவுசெய்தது. அக்கட்டத்தில் முற்போக்குடையதெனக் கருதப்பட்ட தொழிற்கட்சியின் செல்வாக்கு ஏற்படுத்திய முடிவு இது; நியாயமானமுறையில் விவாதித்தெடுக்கப்பட்டது.

பதினெட்டு வருடங்களுக்குப் பின் கடந்தவாரம் மரணதண்டனையை மீண்டும் கொண்டுவர வேண்டுமென்ற பிரேரணை எதிர்பாராத பெரும்பான்மை வாக்குகளால் தோல்வியடைந்தது.

361 வாக்குகள் இதற்கு எதிராகவும் 245 வாக்குகள் ஆதரவாகவும் கிடைத்தன. நீண்டநேர விவாதம் நடைபெற்றது. பிரேரணை கொண்டுவந்தவர்கள் ஆளுங்கட்சியினர். பிரதமர் தாட்சரின் பெரும் ஆதரவு அதற்குக் கிடைத்தது. எமது பாராளுமன்ற அனுபவத்தில் இது மருந்துக்கும் கிடைக்குமா?

இதனை மீண்டும் கொண்டுவரத் தூண்டிய சம்பவங்கள் அங்கு நிலவும் ‘பயங்கரவாதம், என்றே சொல்ல வேண்டும். பொலிஸாரை, ராணுவத்தினரை, ஆட்சியின் பெருந் தலைவர்களை ஐரிஷ் கொரில்லாக்கள் மிக மர்மமான வகையில் சுட்டுக் கொல்வதும் குண்டு வீசிக் கொல்வதும் தெரிந்ததே. எனவே எங்கள் பயங்கரவாதத்தடைச் சட்டம் போன்ற சூழ்நிலை.

காரசார விவாதம் பாராளுமன்றத்தில் முடிவடையும் தறுவாயில் மூன்று கடற்படை வீரர்கள் ஐரிஷ் கொரில்லாக்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதனை இரண்டு விதத்தில் உதாரணமாக வைத்து விவாதித்தவர்களில், மரணதண்டனை விதித்தால் நிலைமை இவ்வாறு மோசமடையுமென்றவருக்கே ஆதரவு காணப்பட்டது.

பிரிட்டிஷ் பொதுமக்கள் எம்மைப்போன்ற சிந்தனைத் திறனுடையவர்களே! ஆனல் ஒரு வேறுபாடு அவர்களின் ஜனநாயகப் பண்பை எடுத்துக்காட்டுகின்றது; அது என்ன?

எந்த விடயத்திலும், குறிப்பாகத் தேசத்துக்கு (கட்சிக்கல்ல) ஆபத்தான கட்டத்தில் தங்கள் பிரதிநிதிகளுக்கு தங்கள்கருத்தை விட்டுக்கொடுப்பதில்லை. தங்கள் முடிவை அவர்களுக்கு நிர்ப்பந்திக்கும் தன்மை அவர்கள் ஒரு முதிர்ச்சியடைந்த மக்கள் குழாமென்ற உண்மையை வலியுறுத்துகின்றது; பொதுஜன அபிப்பிராய நாடியை என்றும் அறியலாம்.

இரண்டாவது உலக மகா யுத்தம் தேசிய அரசாங்கத்தின் தலைவரான பிரதமர் வின்ஸ்டன் (பின்பு சேர்) சேர்ச்சிலின் தனித்துவ திறமையில் வெற்றிகண்டது. யுத்தம் சரிவர முடியு முன்னரே நடந்த பொதுத் தேர்தலில் அவர் பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டதுடன், தொழிற் கட்சித் தலைவர் திரு. அட்லி வரலாற்றில் பெருமைகொண்ட மிகப்பெரும்பான்மை வாக்கால் ஆட்சியைக் கைப்பற்றினார்.

சமாதான வாழ்வுக்கு திரு. அட்லியே (Attlee) தேவையென்பதை அத்தருணத்தில் உணரும் பிரிட்டிஷ் சமத்துவ நோக்கு இருந்தவாறென்னே!

இன்று நடந்தேறிய விவாதமும் அதன் விளைவும் பாராளுமன்ற முடிவை மட்டுமல்ல மக்கள் தீர்ப்பையும் தெளிவாகக் குறிக்கின்றது.

கன்சவேட்டிவ் கட்சி ஆட்சியில் இருக்கின்றது; பெரும்பான்மை பாராளுமன்ற ஆசனங்களைக் கொண்டு அது மிகப்பலமுள்ள ஆட்சியென்று கருதலகாது; ஆனல் அது வேறு விடயம்.

எமது கவனத்துக்குரிய கருத்து இந்த விவாதம் பாரதூரமான தாகையால் நாட்டில் கட்சிகள் அரசியல் தலைவர்கள் மதத்தலைவர்கள் சமூகத் தலைவர்கள் அனைவரும் கூட்டங்கூட்டி அபிப்பிராயத்தை உருவாக்கித் தெளிவு படுத்தினர். இதன் முக்கியத்துவமே பாராளுமன்றமுடிவின் அரும் பெரும் விளக்கம் எத்தனை கன்சவேட்டிவ் எம் பிக்கள் தங்கள் சொந்த அபிப்பிராயத்தை பாக்கெட்டில் போட்டுவைத்திருக்க வேண்டியிருந்தது. ஆட்சிக்கெதிராக வாக்களித்த அமைச்சர்கள் எத்தனை பேர்! எங்கள் பாராளுமன்றத்தில் எதிர்கட்சித் தலைவர் விவாதம் நினைவுக்கு வருகிறது.

படித்து மனவிசாலமடைந்த வாக்காளப் பெருமக்கள் என்பதொன்று; அவர்களின் பிரதிநிதிகளின் பண்பு அதற்கு மேலானது; கட்சிகட்டுப்பாடு அகற்றப்பட்டு சுதந்திரமாக வாக்களிக்கலாமென்பது இன்னுென்று; பிரதமர் சொல்லொன்று செயலொன்று என்ற வண்ணம் நடக்காத பெருந் தலைவர்.

எனவே இம் முடிவு, பொதுஜன அபிப்பிராய (Referendum) முடிவுக்கு நிகரானது.

எனவே Referendum வேண்டுமென்ற கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

# கர்மோஜாவுக்கு ஒரு கண்ணீர்

சென்ற மாதம்18-ம் திகதி சனிக்கிழமையிரவு 7-15 மணி தொடக்கம் 8 - 15 மணி வரை ரூபவாஹினியில் கர்மோஜாவுக்கு ஒரு கண்ணீர் என்ற திரைப்படம் காட்டப்பட்டது. கர்ஜோஜா நாட்டிலுள்ள மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் படமே அது. கர்ஜோஜா ஆபிரிக்கா கண்டத்திலுள்ள உகண்டா நாட்டின் ஒரு வனப்பிரதேசம். நைஜீரியா - சாம்பியாவிலுள்ள மக்கள்போல் உகண்டா நாட்டிலுள்ளவர்களும் மிகக்கரிய நிறமுடையவர்கள். இவர்களின் அங்கலட்சணம் அநாகரிகமானதே! கோரப்பல்வரிசை, சப்பை மூக்கு, குட்டைத்தலைமயிர், முறட்டுத்தோற்றம், இலைகுழைகளாலும் மிருகத் தோல்களாலும் ஆன அரைகுறை ஆடை. ஆணுக்கும் பெண்ணுக்கும் தோற்றத்தில் வித்தியாசம் அதிகம் இல்லை. பெண்கள் தொங்கிய மார்பங்களுடனும் பிள்ளைகள் பெருந்தொந்தியுடையவராயும் காணப்பட்டனர். சிங்கம், புலி, காண்டாமிரும் போன்ற கொடிய மிருகங்கள் வாழும் காட்டில் தடி தண்டுகளால் உருவாக்கிப் புல்லினுல் வேய்ந்த குடில்களே இவர்களின் இல்லங்கள் நல்ல குடிதண்ணீர் இவர்கட்குக் கிடையாது. இவர்களும் கால் நடைகளும் அழுக்கு நிறைந்த நீரோடைகளிலேயே தாகம் தீர்க்கின்றனர். தண்ணீர் பஞ்சத்தால் ஆடு, மாடுகளின் இரத்தத்தை ஆயுதங்களால் குற்றி உறிஞ்சிக்குடிக்கின்றனர். இரத்தம் உறிஞ்சியதும் ஆடு, மாடுகள் விழுந்து மடிந்து விடுகின்றன. விட்டில்ப்பூச்சி, ஈசல், கரப்பொத்தான் போன்ற வண்டுகளை பச்சையாகவே அள்ளி உண்கின்றனர்.

இம்மனிதர்கள் வேட்டையாடி உண்டு வாழ்வதற்கே இறைவனுல் சிருட்டிக்கப்பட்டவர்கள் போலும். இந்த அவல வாழ்க்கை நடத்திய போதிலும் இவர்கள் ஆடிப்பாடிக் குதூகலிக்கின்றனர். இப்படி வாழும் மனிதர்களை சீர்திருத்தி வாழவைக்க இவர்களின் அரசு முயற்சி எடுப்பதாகத்தோன்றவில்லை.

ஆபிரிக்காக் கண்டத்தை இருண்ட கண்டம் என்பர். ஆனல் இக்கண்டத்தில் தான் உலகப் பிரசித்திபெற்ற வைரமும் தங்கமும் வெள்ளியும் தாமிரமும் கிடைக்கின்றன. இடி அமீன் போன்ற இராட்சத மனிதர்களும் இக்கண்டத்தில் தான் தோன்றியுள்ளனர். கர்ஜோஜா நாட்டில் வாழும் மனிதர்க்கு இறை உணர்வு இருப்பதாக அறியமுடியவில்லை. விஞ்ஞானயுகமான இருபதாம் நூற்ருண்டிலும் இப்படியும் வாழ்கிருர்களே!

''அரிது அரிது மானிடராதல் அரிது'' என்பது ஔவைப் பிராட்டியார்திருவாக்கு- இப்படி அரிதான மானுடப் பிறவியை எடுத்தும் சில நாடுகளில் வாழும்மக்கள் பகுத்தறிவற்றதால் கால்நடைகளிலும் பார்க்கத் தாழ்ந்த நிலைகளிலே வாழ்கின்றனர். ஆடு, மாடுகள் தாவரமே உணவாகக் கொண்ட பிராணிகள் ஆனல் இப்பூமியில் மானிடராய் பிறந்தவர் யாவரும் தாவர உணவை உண்ண வாய்ப்பு இல்லாமலுள்ளனர். உதாரண

[5-ம் பக்கம் பார்க்க]

## யாழ்ப்பாணத்தின் முதலாவது ஆயர் எமிலியானுஸ்பிள்ளை



ஈழத்தின் முதல் தமிழ் மேற்றிராணியாரான, மறைந்த யாழ். ஆயர் அதி வந். கலாநிதி ஜே. எமிலியானுஸ் பிள்ளை ஆண்டகை எம்மை விட்டுப்பிரிந்து பதினெரு வருடங்கள்கழிந்துவிட்டன. அன்பும், பண்பும், உருவும், திருவும் நிறைந்த ஆயர் எமில் எல்லோராலும் ‘எமில் ஆண்டவர்’ என அழைக்கப்பட்டார்.

ஆயர் எமில் காவலூர்-கரம்பனைத்தாயகமாகக் கொண்டாலும் 1801ம் ஆண்டு ஜுலை மாதம் வென்னப்புவ என்ற இடத்தில்பிறந்தார். கொழும்பு புனித ஆசீர்வாதப்பர் கல்லூரியில் கற்று பல்கலைக் கழகம் புகுந்து விஞ்ஞானப்பட்டதாரியானுர். தமது மூன்று சகோதரர்களைப்போல தானும் இறைவனுக்கு ஊழியம் புரிய விரும்பி குருமடத்தில் சேர்ந்தார். குருமாணவனுக ரோமாபுரி அங்கிளிக்கஸ் பல்கலைக்கழகத்தில் இறையியலில் கலாநிதிப்பட்டம் பெற்ருர். 1929ம் ஆண்டு ஜுலை 7ம் திகதி அங்கேயே குருப்பட்டம் பெற்ருர் நாடு திரும்பிய இவர் யாழ் மேற்றிராசனத்தில் சேவை செய்தார். யாழ். மாவட்ட முதல்வர், கத்தோலிக்கப் பாடசாலைகளின் பொதுமுகாமையாளர், கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அதிபர் போன்ற பதவிகளை வகித்துச்சகலரதும் நன்மதிப்பைப் பெற்ருர். 1949ல் அப்போதய யாழ். ஆயர் அதி. வந். கியோமோர் ஆண்டகைக்குத் துணை ஆயராகநியமிக்கப்பட்டஇவர், கியோமோர் ஆண்டகை ஓய்வு பெற்றதால் 1950ல் யாழ். ஆயராகப் பதவிஏற்று, முதலாவது தமிழ்ஆயர், யாழ்பாணத்து ஆயர் என்ற இடத்தைப்பெற்றுக்கொண்டார்,

இவரது மறை ஆட்சியில் கன்னியாஸ்திரிகள் மடங்கள், கத்தோலிக்க பாடசாலைகளை

(5-ம் பக்கம் பார்க்க)

# நீதிநெறிதவறிய சமுதாயத்தை சீர்செய்யும் ஒரேமருந்து சிலம்பு நெறியே!

## குன்றக்குடி அடிகளார் வாழ்த்துரை

[சுழிபுரம்]

''ஆதிக்க ஆசையில் நீதி நெறி தவறிநிற்கும் மானிட சமுதாயத்தை சீர்செய்யக் கூடிய ஒரேமருந்து சிலம்பு நெறிதான். அரசியல் நெறி பிழைத்தல் என்பது இன்று உலகந்தழுவியதாக வளர்ந்து வருகிறது. இனவழி, பொருளியல்வழி; அடக்கு முறைகள் வளர்ந்துவருகின்றன. ஒடுக்கு முறைகளும் பெருகி வளர்கின்றன.

மனித குலத்தைப் பூண்டோடு ஒழிக்கும் நீர்வாயுக் குண்டுகள்வரை ஆதிக்க சமுதாயம் கண்டுபிடித்துவிட்டன. செங்கோல் ஏந்துவதற்குப் பதில் துப்பாக்கிகள் ஏந்திநிற்கும் பரிதாப நிலையைப் பார்க்கிறோம். இந்தச் சூழ்நிலையில் கண்ணகி வழிபாடு, மனித உலகத்தின் இன்றியமையாத் தேவை''

இவ்வாறு தவத்திரு குன்றக்குடி அடிகளார் காரைநகர்-வலந்தலை அருள்மிகு ஸ்ரீகண்ணகி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேக சிறப்பு மலருக்கு வழங்கிய வாழ்த்தில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது: ''தங்களால் புதுப்பித்துள்ள திருக்கோயிலில் கண்ணகிதேவி அருட்பொலிவுடன் நீதியினைக் காப்பாற்றும் ஆவேசத்துடன் எழுந்தருளி மனித உலகத்தை அடக்குமுறைகளினின்றும்காப்பாற்றவேண்டும் என்று கண்ணகியைப் பிரார்த்திப்போம். மனிதநீதி பேணும் சமுதாயம் மலர்க! மேன்மைகொள் சிலம்புநீதி வையகமெல்லாம் தழைப்பதாக! இதற்கு நாம் ஒவ்வொருவரும் பாடுபடுவோமாக. (கி)

# எரிபொருள் விற்பனை நிலையத்தில் கொள்ளை!

(மன்னார்)

முருங்கன் பொலிஸ் பகுதியைச் சேர்ந்த மடுவீதி எரிபொருள் விற்பனை நிலையத்தில் துப்பாக்கி முனையில் 300 ரூபா பணமும் கல்குலேற்றர்' ஒன்றும்கொள்ளையடிக்கப்பட்டன. இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 10மணியளவில் இடம்பெற்றது.

சம்பவதினம் இளைஞர் ஒருவர் பெற்றோல் கேட்டு எரிபொருள் நிலையத்தினுள் நுழைந்தார்.

இவரைத் தொடர்ந்து மேலும் இரு இளைஞர்கள் துப்பாக்கியுடனும், கிறிஸ் கத்தியுடனும் அந்த எரிபொருள் விற்பனை நிலையத்தினுள் நுழைந்து மேசைலாச்சியினுள் இருந்த 300 ரூபா பணத்தையும், கல்குலேட்டர்ஒன்றையும் கொள்ளையடித்துச் சென்றனர். (கி)

# ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6-00 | நிகழ்ச்சி முன்னோட்டம் |
| 6-02 | கல்வி நிகழ்ச்சி (சிங்களம்) |
| 6-30 | 'லஸி' ஆங்கில நிகழ்ச்சி |
| 7-00 | செய்திகள் (தமிழ்) |
| 7-15 | கைத்தறிப் புடவைகள் பற்றிய விவரணச் சித்திரம் |
| 7-45 | '240 றொபேர்ட்ஸ்' மீட்புப் படையொன்றின் சாகஸ நிகழ்ச்சி |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-30 | 'றொபேர்ட்ஸ்' நிகழ்ச்சித் தொடர் |
| 9-00 | யூகோஸ்லாவிய நிகழ்ச்சி |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 9-45 | துப்பறியும் நிகழ்ச்சித் தொடர் |

# ரயில்சேவை பாதிப்பால் ஆஸ்பத்திரிகளும் பாதிப்பு!

(பண்டத்தரிப்பு)

தற்போது ஏற்பட்டுள்ள வடபகுதிக்கான ரயில்சேவைத் தடை, யாழ் மாவட்டத்தில் உள்ள அரசினர் வைத்திய சாலைகளுக்கு. இவ்வருட மூன்றுவது கந்தாயத்திற்கான மருந்துவகைகளை விநியோகிப்பதில் பெரும்பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுதொடர்பாக யாழ் மாவட்ட சுகாதார சேவைகள் கண்காணிப்பாளர் டாக்டர் கே. மாணிக்கம் தமது பிரிவிலுள்ள சகல அரசினர் வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகளுக்கும் சுற்றறிக்கை ஒன்று அனுப்பி வைத்துள்ளார், அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

வடபகுதிக்கான புகையிரத சேவையில் தற்போது ஏற்பட்டுள்ள தடை காரணமாகக் கொழும்பிலுள்ள அரசாங்க மத்திய மருந்துக் களஞ்சியத்திலிருந்து எமது யாழ் மாவட்ட மருந்துக்களஞ்சியத்துக்குத்தேவையான மருந்துவகைகள் வந்து சேரவில்லை. எமது யாழ். மாவட்டத்து மருந்துக் களஞ்சியத்தில் மருந்து வகைளின் கையிருப்பு மிகவும் குறைாக இருப்பதால் இப்பிரிவில் உள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு விநியோகிக்கப்படவிருந்த இவ்வருட மூன்றும் கந்தாயத்திற்கான மருந்து வகைகளை உரிய காலத்தில் விநியோகிக்க முடியாது இருக்கின்றது. ஆகவே வைத்திய சாலைகளில் தற்போதுகையிருப்பிலிருக்கும் மருந்துவகைகளை மிகவும் அவதானமாகவும், சிக்கனமாகவும் பாவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்''- (அ)

# நூல் நிலையங்களுக்கு நிதிஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு]

உள்ளூராட்சி அமைச்சு நூல் நிலைய அபிவிருத்திக்காக ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் தலா 10 ஆயிரம் ரூபாவை அண்மையில் வழங்கியுள்ளது.

வட்டுக்கோட்டைத்தொகுதிக்கு கிடைத்துள்ள மேற்படி நிதியை வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. கலாநிதி நீலன் திருச்செல்வம் நான்கு உப அலுவலகங்களின் நூல் நிலையங்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபையின் சங்கானை உப அலுவலகம் வட்டுக்கோட்டை உப அலுவலகம், அராலி உப அலுவலகம், சுழிபுரம் உப அலுவலகம் ஆகியவற்றிற்கு தலா 2,500 ரூபா வீதம் இந்த நிதி பங்கீடு செய்யப்பட்டுள்ளது. [கி]

# புதிய டாக்டர்

(சுழிபுரம்)

டாக்டர் ஏ. இராசநாயகம் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலைக்கு அநுராதபுரம் வைத்தியசாலையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் தொல்புரம் அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றியகாலத்தில் பலரதுபாராட்டுக்குமுரியவராக விளங்கினுர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (கி)

# கர்மோஜா

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

மாக கிறீன்லண்ட் போன்ற வடதுருவநாடுகளில் வாழ்வோருக்கு தாவர உணவு கிடைப்பதில்லை. அவர்கள் கடலில் உற்பத்தியாகும் மீன் மிருக வகைகளையே உண்டு வாழவேண்டியுள்ளது. இவர்களை எஸ்கிமோவர் என்ற அழைப்பர். புலிபசித்தாலும் புல்லைத்தின்னுதென்பது பழமொழிபுலியையும் சிங்கத்தையும்தாவர உணவு ஊட்டி வாழவைக்க இயலாது. மிருக சாதியிலும் ஆடு, மாடு போன்ற தாவர பட்சணிகள் சிறந்தனவே. இவைகள் சாத்வீக குணம் மிக்கன. சிங்கம், புலி போன்ற மாமிச பட்சணிகள் தாழ்ந்தவை. தாமத குணம் மிக்கன இந்த வேற்றுமைக்கு வினைப்பயனே காரணமென்று கொள்ளவேண்டும்.

கர்ஜோஜாவில் பிறந்த மானுடர்களுக்கு விமோசனம் இல்லையா? உண்ண உணவின்றி உடுக்க உடையின்றிக் கற்க வசதியின்றி அவல வாழ்க்கை வாழ்கிறுர்கள். பதினைந்து வயதுடைய கர்ஜோஜா நாட்டுச் சிறுவர்கள் பசி, பிணியால் வருந்தி எலும்புக் கூடுகளாக காட்டிலும் நீரோடைகளுக் கருகிலும் மடிந்து கிடக்கின்றனர். வனவிலங்குகளுக்குப் பலியாகுகின்றனர். ஆனுல் அயல்நாடாகிய இந்தியாவிலுள்ள காஞ்சிபுரத்தில் அதே வயதான சங்கர நாராயணன் என்னும் சிறுவனுக்கு கனகாபிஷேகம் செய்து காஞ்சி காமகோடி பீடத்துக்கு 74வது வாரிசாக காஞ்சிப்பெரியவர் தேர்ந்தெடுத்திருக்கிறுர். என்னே இறைவனின் படைப்பின் விநோதம். நாமெல்லோரும் இப்புண்ணிய பூமியில் பிறந்து வயிறுரா உண்டு உடுத்து நற்பண்புடன் வாழ என்ன தவம் செய்தோமோ?

''புழுவாய்ப்பிறக்கினும்
புண்ணியா உன்அடி என்
மனத்தே
வழுவாதிருக்க வரம் தரல்
வேண்டுமிவ்வையகத்தே''

என்ற நாவுக்கரசரின் தேவாரம் இங்கு நினைவுக்கு வருகின்றது. கர்ஜோஜா மக்களின் சோக வரலாற்றிற்கு இது பொருத்தமான பிரார்த்தனை. ஆனுல் புழு இறைவன் திருவடியை நினைக்க அதன் சிற்றறிவுக்கு பல முண்டா என்பது சந்தேகம்.

செ. இரத்தினசபாபதி

### யாழ். மாநகரசபை

# நல்லூரில் கட்டிய 15கடைகள் விரைவில் கையளிக்கப்படும்

(கல்வியங்காடு)

நல்லூர் கந்தசுவாமிகோவிலருகே புதிதாக அமைக்கப்பட்டுள்ள கடைகள் கோவிலடியில் இடிக்கப்பட்ட கடைக்காரருக்கு விரைவில் கையளிக்கப்படவிருப்பதாக யாழ். மாநகர ஆணையாளர் தெரிவித்தார்.

பக்தர்களின் நன்மைகருதியும், உற்சவகால இடவகதிக்காகவும் நல்லூர் கந்தசுவாமி கோவில் மேற்குத் திசையில் இருந்த கடைகள் சில அவ்விடத்தில் இருந்து அகற்றப்பட்டு வீதி விசாலமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. அகற்றப்பட்ட கடைகளைவைத்து வியாபாரம் செய்துவந்த கடைக்காரர்களுக்கு மாற்று வசதியாகப் புதிய கடைகளைக் கட்டிக் கொடுப்பது என யாழ். மாநகராட்சிமன்றம் எடுத்த முடிவுக்கமைய நல்லூர் கல்யாண மண்டபத்தருகே உள்ள காணியில் கடைகளை கட்டி முடித்துள்ளது.

பெரியதும், சிறியதுமாகக் கட்டப்பட்ட பதினைந்து கடைகளுக்கு ஒரு லட்சத்து எண்பத்தையாயிரம் ரூபாவை யாழ். மாநகரசபை செலவழித்துள்ளது. இக்கடைகளை அடுத்த மாதம் ஆரம்பமாகவிருக்கும் நல்லூர்க்கந்தசுவாமி கோவில்

[8-ம் பக்கம் பார்க்க

# யாழ்ப்பாணத்தின்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்து யாழ். மேற்றிராசனத்தில் சமய வளர்ச்சியை ஏற்படுத்தினுர். மருதமடு அன்னையிடம் வரும் பக்தர்களின் வசதிக்காகப் பல கட்டிடங்களைக் கட்டினுர்.

வெளிநாடுகளிலும் கத்தோலிக்க திருச்சபையிலும் தனித்துவம் வாய்ந்து மதிப்புக்குரியவராக விளங்கிய ஆயர் எமில் இன்றைய கால கட்டத்தில் தமிழ்மக்கள் மத்தியில் இல்லாதது தமிழ் மக்களின் துரதிர்டங்களுள் ஒன்றுகும்.

இவரது ஆன்மாவுக்காக நேற்று யாழ். ஆசனக்கோவிலில் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

—எம். றூபன்

வெளிநாடு செல்கிறீர்களா?

உங்கள் விமான பயணச் சீட்டுக்களை எந்தவித சிரமமின்றி யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.

விபரங்கட்கு:-

த பிறவுன்ஸ் கம்பனி லிமிட்டெட்

249, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி 23680

அறிமுக விலை

★ AGFA கசற்

★ AGFA கசற்

★ AGFA கசற்

விலை ரூபா 30/-

நியூவிக்ரேஸ் எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்

யாழ்ப்பாணம்.

வெளிநாட்டில் பயிற்சிபெற்ற கைதேர்ந்த 'வீடியோ' கமரா வல்லுநர்களால் உங்கள்மங்கள வைபவங்களை வீடியோவில் படம் பிடித்துக்கொள்ள முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுங்கள்.

வீனஸ் 266/1, ஸ்ரான்லி வீதி, (ஸ்ரீதர் தியேட்டர் அருகாமையில்) யாழ்ப்பாணம்.

நியூவீனஸ் 79/1, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்.

### பழையசந்தைப் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து

# திருமலை சிவன்கோவிலடியில் தற்காலிக புதிய சந்தை

(திருகோணமலை)

திருகோணமலை தமிழ் மக்கள் கடந்த இரு மாதகாலமாக திருமலை சந்தையை பகிஷ்கரித்து வந்ததைத் தொடர்ந்து சிவன் கோவிலடியில் புதிய சந்தை ஒன்றை தற்காலிகமாக ஆரம்பித்துள்ளனர். பாதுகாப்பான இடத்தில் நிரந்தரமாக புதிய சந்தை ஒன்றை அமைக்க தமிழ் மக்கள் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர்.

புதிய சந்தை அமைக்கப்பட்டது தொடர்பாக திருமலை எம்.பி. திரு. இரா சம்பந்தன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது: இரு மாதங்களுக்கு முன்பாக திருமலை மக்களால் தெரிவு செய்யப்பட்ட புதிய நகரசபைக்கு மக்கள் நலன்சேவை, பாதுகாப்பு கருதி வேண்டிய இடத்தில் சந்தை அமைக்கும் உரிமை மட்டுமல்ல, கடமையுமுண்டு.

திருமலையில் வன்செயல்கள் வெடிக்கும் போதெல்லாம் சந்தைப் பகுதியில் தமிழர்கள் தாக்கப்படுவது வழக்கம். இம்முறை கூட சந்தைப்பகுதியில் பல தமிழ் வர்த்தகர்களின் கடைகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. தமிழர்கள் தாக்கப்பட்டனர். ஒரு தமிழர் கடைக்குக்குண்டுவீசப்பட்டபொழுது, வாடிக்கையாளர்கள் காயமடைந்தனர். சந்தைப் பகுதியில் பிறிதொரு கடையில் குண்டு வீசப்பட்டபோது தமிழ் வர்த்தகர் தற்பாதுகாப்பிற்காகச் சுட்டார். அவ்வர்த்தகரை பாதுகாப்புப் படையினர், கைதுசெய்து ஜீப்பில் ஏற்றியபின் சந்தைப்பகுதியில் இருந்து வந்த கோஷ்டி கூரிய ஆயுதத்தினுல் அவரை வெட்டியது. பிரபல தமிழ் சாப்பாட்டு கடைக்கு குண்டு வீசப்பட்டபோது அங்கு உணவு அருந்தியவர்கள் பலர் காயமடைந்தனர். குண்டு எறிந்தவரை துரத்திப்பிடித்த தமிழ் அரசாங்க ஊழியர் ஒருவர், சந்தைப் பகுதியிலிருந்து வந்த கோஷ்டியினுல் பலமாக தாக்கப்பட்டார். அதுமட்டுமல்ல குண்டுவீசியவரை காட்டிய இலங்கை வங்கி தமிழ் ஊழியர் சந்தை பகுதியில் தாக்கப்பட்டார்.

77-ம் ஆண்டு வன்செயலின் போது சந்தைப் பகுதியில் தமிழ் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டார், அதுமட்டுமல்ல சந்தைப் பகுதியில் சட்ட விரோதமான கட்டடங்கள், அமைக்கப்பட்டுள்ளது. சட்ட விரோதமான செயல்கள் மலிந்து காணப்படுகிறது. சந்தைப் பகுதியில் மக்கள் மிரட்டப்படுகிறுர்கள். இந்நிலையை மாற்றி சந்தைப்பகுதியில் பல மாற்றம் கொண்டுவர நீண்ட காலம் எடுத்த முயற்சியை அரசு நன்கு அறியும். உயர் மட்டத்தில் எடுத்த முடிவுகள் அமுல் செய்யப்படவில்லை. இந்நிலையில் தமிழ் மக்கள் தேவைக்கேற்ப சந்தையை பாதுகாப்பான இடத்தை நாடினுல் அதனை யார்தான் கண்டிக்க முடியும்.

தமது பாரம்பரிய சமய உணர்வுகள் காரணமாக திருமலை தமிழ் மக்கள் வன்செயல் காலத்தில் பொறுப்புடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்பட்டதற்கு பாராட்ட கடமைப்பட்டிருக்கிறேன். (க)

## "விளையாட்டுக்களினுல் மனிதன் ஆரோக்கியமடைகிறுன்"

(சுண்டிக்குளி)

"இன்றைய மாணவர்கள் தமது ஓய்வு நேரங்களைக்கூட ரியூசன்களுக்கே செலவிடுகின்றனர். விளையாட்டுகளில் ஈடுபடுவதைக் காண முடியவில்லை. இது வேதனைக்குரியவிடயம்".

இவ்வாறு டாக்டர் ஏ. எஸ். ஏபிரகாம் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் கூறினுர்.

கல்லூரி அதிபர் வண. பிதா மைக்கல் யோசப் தலைமையில் நடைபெற்ற இப்போட்டியில் டாக்டர் ஏபிரகாம் தொடர்ந்து பேசுகையில்: "விளையாட்டுக்களால் மனிதன் பூரண ஆரோக்கியமடைகிறுன். இன்று அவை மாணவரிடையே இல்லாது நோயாளிகளாக வைத்தியர்களை நாடுகிறுர்கள். விளையாட்டுக்களால் பல நோய்களும் தீர்க்கப்படுகின்றன. இக்கல்லூரி அன்று தொட்டு விளையாட்டுக்களில் முன்னிற்கிறது. பழைய மாணவனுன நானும் ஒரு விளையாட்டு வீரனுகவே உங்கள் முன் நிற்கிறேன்" என்று கூறினுர்.

திருமதி ஜொய்ஸி ஏபிரகாம் பரிசில்கள் வழங்கினுர்.

### கிளிநொச்சி

## கொத்தணி விருத்திக்கு ரூ.$7\frac{1}{2}$ லட்சம் அரசு ஒதுக்கீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் கொத்தனி அமைப்பின் அபிவிருத்திக்கு அரசு ஏழரைலட்ச ரூபாவை ஒதுக்கியுள்ளதாகக் கொத்தனி அதிபர் இரா. சின்னத்தம்பி நமது நிருபரிடம் தெரிவித்தார்.

விரைவில் கம்பியூட்டர்இயந்திரம் ஒன்றும் கிடைக்கவுள்ளதாகவும் தற்போது ரேனியோ இயந்திரம் ஒன்றும் அம்பிளிபயருடன் ஒலிபெருக்கி சாதனங்களும் அரசிடமிருந்து கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பரீட்சார்த்தமர்கக் கொத்தனி அமைப்புப்பாடசாலைகள் ஒன்று சேர்ந்து நடத்திய விளையாட்டுவிழா வெற்றியளித்ததைத் தொடர்ந்து பின்னர் நடைபெற்ற பொருட்காட்சியும் பெருவெற்றியை ஈட்டியதாகவும், மூன்ரும் கட்டமாக இவ்வமைபில் உள்ள உயர் வகுப்புமாணவர்களின் கல்வி அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு கல்விக் கருத்தரங்கொன்றை விரைவில் நடத்தவுள்ளதாகவும் கொத்தனி அதிபர் திரு. சின்னத்தம்பி தெரிவித்தார். (அ)

## மனநோயாளி தற்கொலை

(கிளிநொச்சி)

வயலுக்கு மருந்து தெளிக்கப் போகவேண்டாம் என்று மனைவி கூறியதைப் பொறுக்க மாட்டாத மனநோயாளியான கணவன் கிருமிநாசினியை அருந்தி மரணமானுர்.

உருத்திரபுரம் சிவநகரைச் சேர்ந்த பொன்னையா சிவப்பிரகாசம் (43 வயது) என்பவரே மரணமானவராவர்.

இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சிப் பகுதி மரணவிசாரணை அதிகாரி திரு. மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸைச் சேர்ந்த ஜனுப் ஆர். ரி. பரீத் ஆஜர்செய்தார்.

மரணமான சிவப்பிரகாசம் ஒரு மனநோயாளி எனவும், அதனுல் அவரை எந்த வேலைக்கும் அனுமதிப்பதில்லை எனவும், சம்பவதினம் வயலுக்குக் கிருமிநாசினி தெளிக்கப் போவதற்கு மனைவியிடம் கேட்டாரெனவும் அதற்கு மனைவி மறுப்புத் தெரிவித்துத் தனது சகோதரனை வயலுக்கு அனுப்பினுர் எனவும் இதன் பின் ஒருவருக்கும் தெரியாமல் கிருமிநாசினியை அருந்தி மரணமானுர் எனவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை எனத்தீர்ப்பளிக்கப்பட்டது. [அ]

# எதிரிக்கு நஷ்டஈடு வழக்காளி செலுத்தினுர்

(மட்டுவில்)

அரத்தால் தாக்கி, கடையிலிருந்த வாகனங்கள் பழுது பார்க்கும் சாவிகளையும், காற்றடிக்கும் பம்ஒன்றையும், பணத்தையும் கொள்ளையடித்ததாகத் தொடரப்பட்ட வழக்கில், எதிரிக்கு வழக்காளி நஷ்டஈடு செலுத்தினுர்,

சாவகச்சேரி நீதவான் திரு. என். யோகசிகாமணி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இந்த வழக்கில், மீசாலையைச்சேர்ந்த கிருஷ்ணசாமி சத்தியமூர்த்தி அதேஊரைச் சேர்ந்த குமாரசாமி விஞயகமூர்த்தி என்பவரை இம்மாதம் முதலாம் திகதி அரம் ஒன்றினுல் தாக்கி காயப்படுத்தியதோடு, அவரிடமிருந்த 515 ரூபா பெறுமதியான சாவிகளையும், பம்ஒன்றையும், ரொக்கம் ரூபா 230 யும் கொள்ளையடித்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் எதிரி தரப்பில் சட்டத்தரணி திரு. எஸ். சுரேந்திரன் ஆஜராஞர். வழக்கை பொலிஸ் சார்ஜண்ட் திரு, வ.சின்னையா நடத்தினுர். விசாரணையின்போது சாட்சியமளித்த வழக்காளி, பொலிஸில் கொடுத்த புகாருக்கு முரண்பாடாகச் சாட்சியமளித்தார்.

பொலிசில் செய்த புகாருக்கும், இப்பொழுது கொடுக்கும் சாட்சியத்திற்கும் நிறைய முரண்பாடு இருப்பதை சட்டத்தரணி சுரேந்திரன் நீதவானுக்குச் சுட்டிக்காண்பித்தார். இதைத்தொடர்ந்து நீதவான் விசாரணையை இடையில் நிறுத்தி எதிரியை விடுதலை செய்தார்.

வழக்காளியை எச்சரிக்கை செய்ததோடு, எதிரிக்கு 100 ரூபா நஷ்டஈடாக வழங்கும்படியும், நீதிமன்றச் செலவாக 50 ரூபா செலுத்தும்படியும் உத்தரவிட்டார்.

# குடத்தனை சிவனடி மரணம் கொலை எனத் தீர்ப்பு

(புலோலி)

குடத்தனை சிவனடியின் மரணம் கொலை எனப் பருத்தித்துறை நீதவான் திரு.கே.கணபதிப்பிள்ளை தீர்ப்பளித்துள்ளார். இக்கொலைச் சம்பவம் தொடர்பாகப் பொலிசாரினுல் தேடப்பட்டுவந்த கொலையுண்டவரின் சகலன் பொலிசில் சரணடைந்து றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 23ம் தேதி இரவு குடத்தனையைச் சேர்ந்த பொன்னன் சிவனடி (வயது 28) என்பவர் குத்துக்காயங்களுக்குள்ளாகி மரணமடைந்திருந்தார். இவரது மரணம் தொடர்பான விசாரணைகள் பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு. கே. கணபதிப்பிள்ளை முன்னிலையில் நடைபெற்றது. பிரேத பரிசோதனையை மேற்கொண்ட பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் சாட்சியமளிக்கையில்;

இறந்தவரின் மீதான பிரேத பரிசோதனையை நான் பருத்தித்துறை நீதவானின் பணிப்பின்பேரில் மேற்கொண்டேன். இறந்தவரின் மார்பில் கத்திக் குத்துக்காயம் காணப்பட்டது. இக்காயம் நாலு அங்குலம் ஆழமானதாகக் காணப்பட்டது. இக்காயத்தினுல் ஈரல், மண்ணீரல் ஆகியன பாதிக்கப்பட்டிருந்தன.

காயத்தினுல் உண்டான இரத்தப்பெருக்கினுலும், அதிர்ச்சியினுலுமே இறந்தவருக்கு மரணம் சம்பவித்துள்ளது, நீதவான், சிவனடியின் மரணம் கொலையெனத் தீர்ப்பளித்தார்.

கொலையுண்டவரின் மனைவியின் சகோதரியின் கணவனுன கந்தன் சிவகுரு என்ற சந்தேக நபர் றிமாண்டில் வைக்கப்பட்டார். எதிரி சார்பில் சட்டத்தரணி என். கிருஷ்ணராசா ஆஜராகியிருந்தார். (க

## 'நடா' பிரச்னை மன்ருரில்!

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணி மத்தியசெயற்குழு இம்மாதம் 22ம் திகதி மன்ருரில் கூடும் பொழுது யாழ்.மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசாவின் ராஜினுமா பற்றி முக்கியமாக ஆராயப்படுமெனத் தெரிகிறது. (சூ)

## வவனியா 'கேடி' சிக்கினுன்!

(வவனியா)

வவனியாப்பகுதியில் பொலிசாரால் தேடப்பட்டுவந்த பிரபல கேடி டொன் அமரசிங்கம் பிடிபட்டுள்ளார்.

வவனியாவில் இடம்பெற்ற ஒரு கொலை மற்றும் காலஞ்சென்ற புலேந்திரனுக்குச் சொந்தமான பெற்ரேல்ஷெட்டில் நடந்த 83 ஆயிரம் ரூபாய் கொள்ளைபோன்றவை தொடர்பாக இவர் தேடப்பட்டு வந்தாராம்.


யாழ்நகர் மக்களுக்கு மகிழ்ச்சியான செய்தி

வெளிநாடுகளுக்கு செல்வதற்கான விமானச்சிட்டுகள், யாழ்நகரிலே பதிவுசெய்வதற்கு நம்பிக்கையான விமான சிட்டுகள் வழங்கும் ஒரே முகவர் நிலையம்.

குரொஸ் ட்ரவல் சேவிசஸ் [பிறை] லிமிட்.

05, நவீனசந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

ஹொலன்ட் (HOLLAND) வழியாக இத்தாலி (ITALY) பிரான்ஸ் (FRANCE) ஆகிய நாடுகளுக்கான பிரயாணச் சீட்டுகள் மற்றும் ஜேர்மனி (GERMANY), கனடா (CANADA), சிங்கப்பூர் (SINGAPORE) ஹொலன்ட் (HOLLAND) நோர்வே (NORWAY) நைஜீரியா (NIGERIA)

போன்ற நாடுகளுக்கான குறைந்த கட்டண பிரயாணசீட்டுகள், பிரயாணிகள் காசோலை, விசா (VISA)

கனடா, அமெரிக்கா செல்வதற்கு தேவையான ஒழுங்குகள்

மற்றும் பிரயாண ஒழுங்குகள் எதுவாஞலும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்...

CROSS TRAVEL SERVICES (PVT)LTD.

Approved Passenger Sales agent in Sri LanKa M/s swissair

Stage II Modern Market Ist Floor

BUS STAND CENTRE ROAD, JAFFNA. Phone 22040—22065

**சாந்தி** யாழ்.
தினசரி 3 காட்சிகள்
கடைசி வாரம்
**தியாகம்**
(கலர்)

**ராஜா** (யாழ் நகர்)
படம் பார்ப்பவர்களின் வசதியை முன்னிட்டு காட்சி நேரங்கள் பின்வருமாறு:-
10-30, 1-30, 6-00
பாக்கியராஜ்- அம்பிகா
கல்லாப்பட்டி சிங்காரம்
நடித்த



**அந்த 7 நாட்கள்**
(கலர்)
கதைவசனம், டைரக்ஷன்
பாக்கியராஜ்


# இன்றைய பலன்

ஆடி 2ம் திகதி
திங்கட்கிழமை

(18—7—83)

மேடம்: இன்பத்தின் அழைப்பு இன்று தாராளமாகக் கிடைக்கும், காதலர்கள் வாழ்க்கையில் தடைக்கல் விலகி நல்லமுடிவு ஏற்படும் பெற்றோர் ஆதரவு உண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

இடபம்; விஷப்பரீட்சையின் மூலம் விபரீதங்கள் விளையும், மயக்கும் மொழிகளால் பணத்தை இழக்க நேரிடும், இன்று சும்மா இருப்பதே உத்தமம், சூழ்ச்சிவலை பின்னும், கடன்பட நேரிடலாம்.

மிதுனம்: இலட்சியப் பாதையில் வெற்றிநடைபோடுவீர்கள், உயர்வட்டத்தின் அன்பும் அவசியம் கிடைக்கும், பதவி உயர்வுக்கும் தொழில் விருத்திக்கும் இடமுண்டு.

கடகம்; கடமையில் ஆர்வம் பிறக்கும், இதன்மூலம் புதிய பாதைபிறக்கும், வெளியிடத்துத் தொடர்புகளினுல் வெற்றி உண்டு, தொழில் மாற்றம் அல்லது இருப்பிட மாற்றம் நன்மையைத் தேடித் தரும்.

சிங்கம்: நீண்டநாள் கொடுக்கல் வாங்கல் நிவர்த்தியாகும், சுற்றுடலில் மதிப்பு உயரும், பெரிய மனிதரின் ஆதரவும் அறிஞர்களின் சந்திப்பும் நிகழும், பத்திரிகையாளரின் வேதனம் உயர்த்தப்படும்.

கன்னி: எண்ணங்கள் ஆயிரம் சிந்தனையில் தடைப்படும், ஏமாற்றம் தாக்கும், விந்தையான போக்கு வேடிக்கைகாட்டும், பூமிப்பிணக்குகளினுல் வழக்கு விவகாரங்களில் மாட்டிக் கொள்ளநேரிடும்.

துலாம்: கண்களில் கனல் கொதிக்கும், கருத்தினில் கர்வம் தோன்றும், கொள்கையில் கோணல் குன்றிடும், குடும்பத்தில் குறுக்கு வழித் தலையீடு கவலைத்தரும்.

விருச்சிகம்: திடீர்த் திருப்பம் வாழ்க்கையை வளம்படுத்தும், சிலர் வாழ்க்கையில் மறக்க முடியாத நிகழ்ச்சிகள் உருவாகும், இதயத்தில் இன்பத்தின் ரேகைகள்படரும்.

தனு: நினைத்தது நடக்காது, நிம்மதி கிடைக்காது, நெடும் பயணம் வேண்டாம், அவசரக்கோலம்தலைகாட்டும், அதன் வழியால் துன்பங்கள் தொடரும், ஆசாரக்குறைவும் உண்டு.

மகரம்: வாகன விருத்திக்கும் இடமுண்டு, மோனவாழ்வுக்கும் முன்னேற்றத்திற்கும் வழி பிறக்கும், தாய்வழித் தனத்துக்கும் தன்மானமும் கிடைக்கும்.

கும்பம்: கனிவான பேச்சு காந்தம் போல் பார்வை கன்னியர் உறவும் காதலுக்கும் இடம் உண்டு, புதிய பாதையும் புத்திரர் புகழும் கிடைக்கும், தெய்வவழிபாட்டில் ஆர்வம் பிறக்கும்.

மீனம்: தவறுகள் நடக்கலாம், நிலையும் தடுமாறும் நண்பர்களே காலைவாரிவிடக் கூடும், சிலருக்கு அன்னிய வாசமும் ஏற்படலாம், எதிரிகள் விழிப்புடன் காத்திருப்பார்கள்.

சோதிடக் கலாநிதி
திருமலை
**க. வேலுப்பிள்ளை**


**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
கடைசி சில தினங்கள்
**நீரும் நெருப்பும்**
அடுத்த வெளியீடு **துணை**

**வெஸ்லி** (மானிப்பாய்)
தினசரி 4-15, 7-00
சனி, ஞாயிறு 1-40
என். டி. ராமராவ்
அஞ்சலிதேவி
**பாலநாகம்மா**

28-7-83 வரை மட்டும்
**மனோகரா** (யாழ். நகர்.)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன்-ஸ்ரீதேவி
**வாழ்வே மாயம்**
(ஈஸ்மன்கலர்)

**ஸ்ரீதர்** தினசரி 10-30, 2-30, 6-30
(யாழ்ப்பாணம்)
ரஜனிகாந்த்— **காளி**

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-30, 9-30
பிரதாப்— சோபா
**மூடுபனி**

**லிடோ** (யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
**மன்னவன் வந்தானடி**

**ராணி** தினசரி 10-30, 2-30, 6-15 மட்டும்
(யாழ். நகர்)
ஜனத்திரள் நிறைந்த 9-வது வாரம்
கமலஹாசன் - அம்பிகா
**சகல கலா வல்லவன்**

**றீகல்-Regal** தினசரி 10-30, 2-00, 4-30
7-15 P. M.
இன்னும் 7 தினங்கள் மட்டும்
கபீர்பேடி....சனும் சூரி... நடிக்கும்
**"கேர்ல் (f)ப்ரம் இந்தியா"**
**GIRL FROM INDIA**
TECHNICOLOR
வயது வந்தவர்கள் மட்டும்

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர் - மஞ்சுளா - லதா
**உலகம் சுற்றும் வாலிபன்**
21-7-83 முதல் சிவாஜி-முத்துராமன் விஜயா
**நெஞ்சிருக்கும்வரை**
விரைவில் வருகிறது
**ஆனந்தராகம்**


## முல்லைத்தீவுக்கு இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றிய திரு. செ. மெற்றுஸ்மயில் முல்லைத்தீவுக் கல்வித்திணைக் களத்திற்குப் பிரதம எழுதுவினைஞராக இம்மாதம் 15-ம் திகதியிலிருந்து மாற்றம் பெற்றுள்ளார்.

இவர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் பொழுது அரசாங்க எழுதுவினைஞர் சங்கத்தின் யாழ். பிரதிநிதி மற்றும் யாழ். கிளையின் செயலாளர், உபதலைவர், தலைவர் பதவியையும் வகித்தார்.

யாழ். கல்வித்திணைக்களத் தமிழ் இலக்கிய மன்றத்தின் செயலாளராகவும் பொழுது போக்குக் களரியின் கலாசாரச் செயலாளராகவும் கடமையாற்றியுள்ளார். (அ)

# "கிளிநொச்சி மக்கள் வங்கியில் களவுபோன நகைகளை தாமதமின்றி வழங்குக"

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மக்கள் வங்கியில் கொள்ளை போனதாகக் கருதப்படும் நகைகளுக்கான நஷ்டஈட்டைக் காலம் தாழ்த்தாது வழங்க முன்வரவேண்டுமென்று கிளிநொச்சியில் நகை அடைவுவைப்போர் பாதுகாப்புச் சங்கத்தை அங்குரார்ப்பனம் செய்துவைத்து உரையாற்றுகையில் திரு. நா. சோதிநாதன் குறிப்பிட்டார்.

திரு. க. பாக்கியநேசர் தலைமையில் கனிஷ்ட மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் சங்கத்தின் தலைவராக க. பாக்கியநேசரும், உபதலைவராக எம். தியாகராசாவும், செயலாளராக திரு. எம், இராமநாதனும், உபசெயலாளராக திரு. என். சோதிநாதனும் தெரிவாகினுர்கள்.

திரு. சோதிநாதன் மேலும் பேசுகையில் கிளிநொச்சி மக்கள் வங்கியில் அடைவுவைத்துக் களவுபோன நகைகளுக்கான நஷ்டஈட்டைக் காலம் தாழ்த்தாது வழங்க முன்வர வேண்டுமென்றும், அடைவு வைத்த நகைகள் மீளக்கிடைக்காததால் இப்பகுதி மக்கள் அநேக துன்பங்களை அனுபவிக்கின்றனர் என்றும், மக்கள் வங்கி மீதும் மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர் என்றும், களவுபோன நகைகளுக்கான நஷ்டஈட்டை எடைக்கு எடை பவுணைக் கொடுப்பதன் மூலம் நிவர்த்தி செய்யலாம் என்றும், இதுவே எமது கோரிக்கையாகவும் உள்ளது என்றும் சொன்னுர்.

ஓய்வுபெற்ற பொலிஸ்இன்ஸ்பெக்டர் திரு. எம். இராமநாதன், தபால் அதிபர் திரு. எஸ். எஸ். செல்லையா ஆகியோரும் உரையாற்றினுர்கள். (உ)

## "பாரம்பரிய விளையாட்டுகளுக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும்"

(கிளிநொச்சி)

"தமிழ்மக்கள் மத்தியில் சிறந்த விளையாட்டு வீரர்கள் உள்ளனர். இவர்களின் திறைமைகளை எடுத்துக்காட்டச் சந்தர்ப்பம் வழங்க வேண்டும். இதேவேளை தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுத் துறைகளுக்கும் ஊக்கமளிக்கப்படவேண்டும் என்று முரசுமோட்டையில் நடைபெற்ற கரைச்சிப்பிரிவு மாட்டுவண்டி சவாரிப்போட்டியின் பரிசளிப்பு விழாவுக்குத் தலைமைவகித்து உரையாற்றுகையில் சமூக சேவையாளரும் கிளிநொச்சி பரந்தன் றேட்டறிக்கழகச் செயலாளருமான கவிஞர் ப. வை. ஜெயபாலன் குறிப்பிட்டார்.

மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இம் மாட்டு வண்டிச் சவார்ப் போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்களை றேட்டறிக்கழகத் தலைவர் டாக்டர் என். சிறீதரன் வழங்கினுர்.

கவிஞர் ஜெயபாலன் மேலும் பேசுகையில் கூறியதாவது: "தமிழ்மக்களின் பாரம்பரியகலை கலாசாரம் பேணப்பட வேண்டும். மறைந்துவரும் கிராமிய விளையாட்டுத் துறைக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும். கிளிநொச்சிப் பகுதியில் கிராமிய விளையாட்டுத் துறைகளுக்கு ஊக்கமளிக்கும் வகையில் வருடாவருடம் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டிகளை நடத்தி வரும் நாம் எதிர்வரும் ஆண்டுகளில் வடக்கு கிழக்கு தமிழ் மாகாணங்கள் இணைந்த விளையாட்டுப் போட்டிகளாக நடத்த முயற்சிகள் மேற்கொள்வோம் என்முர்.

விவசாய உத்தியோகத்தர் திரு. செல்வராசா உட்பட வேறு பலரும் உரையாற்றினுர்கள்.

## தனிநடனப் போட்டியில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக் கிடையிலான இசை, நடன, நாடகப்போட்டிகள் யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். சிவநாயகமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

ஆரம்ப பிரிவுக்காகிய தனி நடனப்போட்டியில் வண்ணூர் பண்ணை இளையதம்பி வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவி செல்வி சோ. மீனுபிரியதர்ஜினி முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். ஆரம்பபிரிவு இசைப்போட்டி குழு நிகழ்ச்சியிலும் இப்பாடசாலை முதலிடம் பெற்றது. இசைப் போட்டி ஆரம்ப பிரிவு தனி நிகழ்ச்சியில் இவ்வித்தியாலய மாணவி செல்வி. பே. குகப்பிரியா மூன்றும் இடத்தைப் பெற்றுள்ளார்.

பாடசாலை ஒன்று கூடலின் பொழுது மாணவர்களின் முன்னேற்றத்திற்காக ஒற்றுமையுடன் அயராது பாடுபட்ட ஆசிரியர்களைப் பாராட்டியதுடன் மாணவர்களுக்கும் அதிபர் சான்றிதழ்களை வழங்கினுர்.

## மகேந்திரன் விடுவிக்கப்பட்டார்

(கொழும்பு)

நாலாவது மாடியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மண்டூர் மகேந்திரன் என்பவர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டார்.

## முதலிலே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

சாவகச்சேரி மாவட்ட
நீதிமன்றம்

காலஞ்சென்ற வரணி கரம்பைக் குறிச்சியைச் சேர்ந்த வல்லிபுரம் சுப்பிரமணியத்தின் மரண சாதன விடயமாக

எதிர்

வரணி கரம்பைக் குறிச்சி வல்லிபுரம் சுப்பிரமணியம் பெண் கருணேஸ்வரி.

மரணசாதன நியாயாதிக்கம் } இல: 211ரீ.

மேலே இலக்கம் பூண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரண மெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும், 1983ம் ஆண்டு ஆனி மாதம் 1ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும், இத்தால் அறிவிக்கப்படுகிறது.

நீதிமன்றக் கட்டளைப்படி

பதிவாளர்
**வி. சிவசுப்பிரமணியம்**

வரைவு
**வி. பி. கார்த்திகேசு**
மனுதாரின் சட்டத்தரணி.
7836

## "இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின்

# சகல கிளைகளும் ஒன்றாக நடவடிக்கை எடுக்கவேண்டும்"

## யாழ். சட்டத்தரணிகள் சங்கம் தீர்மானம்

(கல்வியங்காடு)

''நீதி அரசர்களின் இல்லங்களுக்கு முன்பாக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு எதிராக இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கங்களின் எல்லாக் கிளைகளும் ஒருமித்து நடவடிக்கை எடுக்கவேண்டும்.''

யாழ். சட்டத்தரணிகள் சங்கப் பொதுக்கூட்டத்தில் மேற்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

யாழ். சட்ட நூலகத்தில் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

நீதி அரசர்கள் வெளியிட இருக்கும் கருத்துகளுக்குக்காத்திருந்து அதற்கேற்ப நடவடிக்கைகளில் ஈடுபடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஒரு குறிப்பிட்ட தினத்தில் தாய்ச் சங்கத்தின் முழு ஆதரவோடு அந்த நேரடி நடவடிக்கை எடுப்பதும் தாமதிக்கப்படக்கூடாது என மல்லாகம் சட்டத்தரணிகள் சங்கப் பிரதிநிதிகள் வலியுறுத்தினுர்கள்.

யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் சங்கப் பொதுக்கூட்டத்தில் சேர்ந்து தீர்மானம் எடுப்பதற்காகவே மல்லாகம் நீதிமன்றத்தைப் பகிஷ்கரிக்க இருந்த நடவடிக்கை கைவிடப்பட்டதாகவும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தரணிகள் ஆர். பாலசுப்பிரமணியம், பி. குமரகுரு, ஜிம்மி இராஜரத்தினம், ச. செல்வராசா, சதா. சிறீனிவாசன், கந்தையா, குணரத்தினம் முதலியோர் கருத்துரைகளை வழங்கினர். (க)

---

## தமிழீழ விடுதலை அணி தலைவர்களை விடுதலைசெய்ய கோரிக்கை

(சாவகச்சேரி)

சாத்வீக வழியில் ஹர்த்தாலை நடாத்திய தமிழீழ விடுதலை அணியின் தலைவர் டாக்டர் தர்மலிங்கம் செயலாளர் கோவைமகேசன் ஆகியோரை கைதுசெய்தமை ஜனநாயக விரோத நடவடிக்கையாகும். அவ்வாறு கைதுசெய்யப்பட்ட இரு தலைவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

தமிழீழ விடுதலை அணியின் சாவகச்சேரிக் கிளைப் பொதுச்சபையில் மேற்கண்டதீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

சாவகச்சேரியில் தலைவர்திரு. எச். இ. அருளம்பலம் தலைமையில் நடைபெற்ற அணியின் பொதுச்சபைக்கூட்டத்தின்போது கீழ்க்காணும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டன.

ஜனநாயகத்தின் பாதுகாவலனுகவும், தமிழ் மக்களின் உரிமைகளை வலியுறுத்தியும் வெளிவந்து கொண்டிருந்த 'சுதந்திரன்'. சற்றடே றிவியூ பத்திரிகைகளைத் தடைசெய்து அவற்றின் அலுவலகங்களுக்குச் சீல் வைத்து இயங்கமுடியாமல் செய்தது ஜனநாயவிரோத செயலாகும். எனவே ஜனநாயகத்தின் பெயரால் இப்பத்திரிகைகளின் மேல் விதிக்கப்பட்ட தடையை நீக்கி அவைகளைச் சுதந்திரமாக இயங்க விடல் வேண்டும்: (க)

---

## "வடக்கு கிழக்கிற்கு வெளியில்வாழும் 15 லட்சம் மக்களுக்கு சிறந்த கல்விவசதி வழங்கவேண்டும்'

(கொழும்பு)

''வடக்கு, கிழக்குமாகாணங்களுக்கு வெளியில் வாழும் தமிழ் மாணவர்களின் நலன் கருதி ஸ்தாபிக்கப்பட்ட இரத்மலானை இந்துக் கல்லூரியை சகல வசதிகளும் கொண்ட றேயல், ஆனந்தா கல்லூரிகள் போன்றவற்றின் தரத்திற்கு கொண்டுவரவேண்டியது தமிழ் மக்களின் கடமை. ஸ்தாபகர்களின் இந்த இலட்சியம்நிறைவேற தமிழ் அன்பர்களும், பணம்படைத்தோரும்உழைக்க முன்வரவேண்டும்''.

இவ்வாறு முன்னுள் செனட்டர் எஸ். நடேசன் கொழும்பு சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற இரத்மலானை இந்துக் கல்லூரி அபிவிருத்திச் சங்கத்தினர் நடாத்திய தேநீர் விருந்துபசாரத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கூறினுர்.

கல்லூரி அதிபர் திரு. எம். செல்வராஜா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் கல்லூரி ஸ்தாபகர்களானதிரு. எஸ். நடேசன், கொழும்புஇந்து வித்தியாவிருத்திசங்கத்தலைவர் திரு. கே. ஸி. தங்கராஜா, கொழும்பு மாவட்டசபைஉறுப்பினர் திரு. எம். எஸ். செல்லச்சாமி, தொழிலதிபர்கள்: திருவாளர்கள், ஈ. சிதம்பரம், சி. தேசபந்து, மற்றும் ஆசிரியர்களும், அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இக்கல்லூரியில் ஒரு இக்கட்டான நிலையிலேயே ஆசிரியர்கள் கல்வி கற்பித்துக்கொண்டு இருக்கிறுர்கள். இன்றையசூழ் நிலையில் எம்மை இறைவன் தான் காப்பாற்ற வேண்டும் என்றும் திரு. நடேசன் தமது உரையில் கூறினுர்.

மற்றுமொரு பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்ட திரு. செல்லச்சாமி உரையாற்றுகையில் கூறியதாவது:-

வடக்கு கிழக்குக்கு வெளியே தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அப் பகுதிமக்களுக்கும் சிறந்த கல்விவசதி வழங்கவேண்டும். அவர்களுக்காகவே உருவாக்கப்பட்ட இந்தக்கல்லூரியை அபிவிருத்திசெய்யவேண்டியது மிக அவசியம். இதற்கு என்னுலான சகல உதவிகளையும் செய்ய ஆயத்தமாக இருக்கிறேன்.

தமிழ்ப்பாடசாலைகளில் ஆசிரியர் பற்றுக்குறை, விஞ்ஞான கூடம்இன்மை, தளபாடவசதியின்மை ஆகியன இப்போது நிலவிவருகிறது.

கொழும்பில் உள்ள தமிழ் பாடசாலைகளில் நில்விவரும் ஆசிரியர் பற்றுக்குறைபற்றி மாவட்டசபையினதும் ஜனுதிபதியினதும் கவனத்திற்கு இவ்விவகாரத்தைக் கொண்டுவந்து உரிய நடவடிக்கை எடுக்க இருக்கிறேன்:

தமிழ்மக்களைப் பொறுத்தவரை வருடாவருடம் பண்டிகைகள் வருவதுபோல் அச்சுறுத்தல்களும் வந்துகொண்டே இருக்கிறது. நாம் இனிமேலும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதனை எதிர்கொள்ள ஆயத்தமாக இருக்கவேண்டும். கல்லூரியின் அபிவிருத்தி நடவடிக்கைகளைக் கவனிப்பதற்காக பின்வருவோரைக் கொண்டகுழு ஒன்றும் கூட்டத்தில் தெரிவுசெய்யப்பட்டது. திரு. எம். செல்வராசா (அதிபர்), திருவாளர்கள் ஏ. ஞானசேகரம், சி, சற்குணனந்தன், ஏ. ஜெயரத்தினம், பி. இராஜரத்தினம், ஈ. சிதம்பரம், பி. ஏ. கிருஷ்ணசாமி, சி. நேசபந்து, ஏ. சொலமன்ராஜ், (இ-க)

---

## நல்லூரில்

[5ம் பக்கத் தொடர்ச்சி]

வருடாந்த உற்சவத்துக்கு முன்னதாகப் பழைய கடைகள் வைத்திருந்த உரிமையாளர்களுக்குக் கையளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான கடிதங்களை யாழ். மாநகர ஆணையாளர் திரு. கே. சிவஞானம் கடை உரிமையாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

யாழ். மாநகரசபை செலவு செய்த தொகையைத் திருப் பெறும்வகையில் பெரிய கடைகளுக்குக் கூடிய மதிப்பீடும் சிறிய கடைகளுக்குக் குறைந்த மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக ஆணையாளர் தெரிவித்தார்

---

## பூம்புகார் கொலை வழக்கு இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

பூம்புகார் கொலை வழக்கு யாழ். நீதவான் எஸ். நாகராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு இன்றுவரைஒத்திப்போடப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் ம. தியாகராசா, ஐ. ரத்தினம், பொ. மகேந்திரன், பொ. குலேந்திரன், ப. துரைசிங்கம், ம. விஜயகுமார், மா. மகேந்திரராஜா ஆகியோர் 82-ம் ஆண்டு மார்ச் 29-ல் அரியாலை பூம்புகாரில், சவரிமுத்து மோசேஸ் என்பவரை கொலை செய்ததாகவும் சி. திருநாவுக்கரசு என்பவரின் காரை உடைத்து 5000 ரூபா சேதம் விளைவித்ததாகவும், த. குமார் என்பவருக்கு படுகாயம் விளைவித்ததாகவும், சட்டவிரோதமாக கூட்டம் கூடியதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். 1-ம், 2-ம், 3-ம், 5-ம், 7-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஆர். பி. சபாரத்தினம், சட்டத்தரணி ரி. லிங்கராசாவின் அனுசரணையுடன் ஆஜரானுர். 4-ம், 6-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ரி. லிங்கராஜா ஆஜரானுர், (மா)

---

## ரயில் சேவை ரத்தினுல்.

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தொடர்ந்து வேலை செய்தால் நிரந்தரமாக்கப்படுவார்கள்.

ரயில்சேவை ரத்துச் செய்யப்பட்டதை தொடர்ந்து வவுனியா முதல் காங்கேசன் துறையிலான ரயில் நிலையங்களில் அமைய தொழிலாளர் வேலையிழந்துள்ளனர். (மா)

---

## கிணற்றிலிருந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யில் வசித்து வந்ததாகவும். சிலதினங்களுக்கு முன்னர் வல்வெட்டித்துறை பொலிசார் வீட்டுக்குவந்து தமதுகணவனை தேடியதாகவும் கணவர் வீட்டிலில்லாததினுல் கணவனை பொலிஸ் நிலையத்திற்கு வரும்படி தன்னிடம் கூறிவிட்டு சென்றதாகவும் அன்று பின்னேரம் கணவன் வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்திற்கு சென்றதாகவும் பின் திரும்பிவரவில்லையென்றும் மனைவி இந்துமதி தெரிவித்துள்ளார்.

கணவனை பல இடங்களில் தேடியபின் கிணற்றுக்குள் சடலமொன்றிருப்பதாக பத்திரிகை மூலம் அறிந்து வந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கர்ப்பிணியான இந்துமதி கணவன் சடலத்தை பொறுப்பேற்று சமயாசாரப்படி இறுதி மரியாதை செய்வதற்காக இன்று பருத்தித்துறை நீதிமன்றத்தில் விண்ணப்பம் ஒன்றைச் சட்டத்தரணி மூலம் தாக்கல்செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

---

## பேராதனையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இரவு தொடங்கிய இவ்வெளியேற்ற நடவடிக்கை நேற்றுக் காலை முடிவடைந்திருக்கிறது. கண்டி பொலிஸ் அத்தியட்சகர் இது குறித்துத் தகவல் தருகையில் மாணவர்களை வெளியேற்றியபோது மூன்று மாணவர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகவும், இவர்கள் முன்னைய சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில் பேராதனைப் பல்கலைக் கழகப் பரீட்சைகளுக்கான திகதி விரைவில் அறிவிக்கப்படுமென்று பல்கலைக்கழக மான்யக் குழுவின் தலைவரும், உயர்கல்வி அமைச்சின் செயலாளருமான பேராசிரியர் ஸ்ரான்லி கல்பகே தெரிவித்துள்ள . பேராதனைப் பல்கலைக் கழக விடயம் தொடர்பாக ஜனுதிபதியுடன் பேசியதாகவும் இதன் பெறுபேறுகள் விரைவில் அறிவிக்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (சூ)

---

## மீசாலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தவர் என்றும் இறந்தவரின் தாயார் அளித்த சாட்சியத்திலிருந்து தெரியவந்துள்ளது.

''இறந்தவர் 1979ம் ஆண்டுக்குப்பின்னர் தங்களுடன் எதுவித தொடர்புகளுமின்றிப் பிரிந்துவிட்டார் என்றும் தாயார் தெரிவித்துள்ளார்.

தமது மகனது சடலத்தை திருமலைக்குக் கொண்டுசென்று சமயாசாரப்படி அடக்கம் செய்ய தம்மிடம் ஒப்படைக்குமாறு தயார் கோரியபோது, பாதுகாப்பு அமைச்சுக்கு அறிவித்துவிட்டதாகவும் அதுபற்றிய பதில்கிடைத்ததும் முடிவு தெரிவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டதாகத் தெரியவருகிறது மற்றைய இளைஞரின் சடலம் இன்னமும் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. நேற்று இச்சடலம் ஊதிப்பொருமிய நிலையில் காணப்பட்டது. பொலிசார் ஆஸ்பத்திரி பிரேத அறைப்பக்கம் அடிக்கடி சென்று பார்வையிட்டனர்.

இப்பொழுது அமுலிலுள்ள அவசரகாலச் சட்டத்தின் விசேஷ பிரிவின் கீழ் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப்பலியான இருவரதும் மரண விசாரணையோ பிரேத பரிசோதனையோ நடைபெறமாட்டாது.

இருவரது சடலங்களும்அரச செலவிலேயே அடக்கம் செய்யப்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

---

## விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்

(பண்டத்தரிப்பு)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலையில் தேசிய தொழில் பயிலுநர் பயிற்சித் திட்டத்தின் கீழ் பயிற்சிபெற்றுவரும் கனகசபை கெங்காதரன் என்ற 24 வயது இளைஞர் ஆயுதப் படையினரால் விசாரணைக்காக குருநகர் இராணுவமுகாமுக்குக் கூட்டிக்செல்லப்பட்டார்.

---

## பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டது

புதுடில்லி, ஜுலை. 17

மஹாராஷ்டிர மாநிலத்தில் அமராவதி என்னும் இடத்தில் கைதி ஒருவர் இறந்தது தொடர்பாக கும்பல் ஒன்று பொலிஸ் நிலையத்தை தாக்கியதில் பொலிசாரொருவர் பலியானுர். மற்றும் 80பேர் காயமடைந்துள்ளனர்.

பொலிசார் கும்பலை கலைக்க சுட்டதில் 18 பேர்காயமடைந்தனர். (சூ)

---

## பயங்கரவாத...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எந்தஒரு நாடும் அமைதியாகவும், ஒற்றுமையாகவும் இருந்தது கிடையாது. இதற்கு பலநாடுகளை உதாரணம்காட்ட முடியும். இந்தியாவில் தற்போது பிரிவினைச் சக்திகளின் செயல்களினுல் பெரும் இரத்தக் களரி ஒன்று ஏற்பட்டிருக்கிறது. இதனை நாம் உணரவேண்டும்' என்றுர். (சூ)

---

## வர்த்தகர்களுக்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ழுத்திட்டுள்ள இச் சுவரொட்டிகளில் வர்த்தகர்கள் பொருட்களை கூடியவிலைக்கு விற்பதாக உளவறியும் பிரிவினர் அறிவித்துள்ளதால் கட்டுப்பாட்டு விலைக்குக்கூட பொருட்களை விற்கும் வர்த்தகர்கள், சமூக விரோதிகளாக கருதப்பட்டு மரணதண்டனைக்கு ஆளாவார்கள்' என்று கூறப்பட்டுள்ளது. (க)

---

## ஆறுவது அரசியல்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்க வேண்டும்' என்பதற்கு ஒப்பாகும்.

'சத்தியப் பிரமாணம் எடுத்து விதிக்கப்படுகின்ற சர்வாதிகார சட்ட திட்டங்களுக்கு கீழ்ப்பட்டு பாராளுமன்றத்தில் பிரதிநிதியாக பொம்மைகளாக இருப்பதற்கு எம்மை தமிழ் பேசும் தேசிய இனம் அனுப்பவில்லை.

'எமது உரிமைகளை மீட்பதற்கு பாராளுமன்றத்தையும் ஒரு கருவியாகப்பாவிப்பதற்கே அசைக்க முடியாத இலட்சிய ஆணையுடன் நாம் பிரதிநிதிகளாக எமது இயக்கத்தின் சார்பில் தெரிவு செய்யப்பட்டோம். ஆட்சியாளரின் இனவிரோத அடக்கு முறைச் செயல்களினுல் பலதுறைகளிலும் பாதிக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் தனது உரிமையை மீட்பதில் எந்தச் சட்டத்துக்கும் அஞ்சி அடங்கி விடமாட்டாது.

''உரிமை கோருவதை, பிரிந்து வாழ எம்மை விடு என்று கேட்பதை இனவாதம் என்று எவரும் கூற முடியாது. விளைவு, எதிர்ப்பு எதுவரினும் தாங்கி ஏற்று எமது சுயநிர்ணய உரிமையைவென்று எடுக்கத்தமிழ் பேசும் இனம் தன்னை அர்ப்பணிக்க வேண்டிய காலம் அண்மிக்கின்றது என்பதையே நாம் காணமுடிகின்றது.

---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1983—ம் ஆண்டு ஜுலை மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka. under number B 100236/81. Eelanadu-P. O. Box: 49, Telegram: Eelanadu, Telephone: 22389—24126.